விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 13 சனிக்கிழமை (28.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களை தாம் மீட்டுள்ளதாக திம்புலாகல பொலிஸார் தெரிவித்தனர்.

திம்புலாகல சோரிவில கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யுத்தம்நடைபெற்ற காலத்தில் இந்த பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாம்கள் இருந்ததாகவும் அவற்றில் இருந்த ஆயுதங்களாக இவை இருக்கலாம் என பொலிஸார தறிப்பிட்டுள்ளனர். (செ-11)

## சர்வதேச அரசியல் இலாபத்திற்காகவே ஜனாதிபதியின் அழைப்பு நிராகரிக்கப்பட்டுள்ளது

### த.தே.கூட்டமைப்பை கடிந்துகொள்கிறது அரசு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கம் அமைத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நம்பகத்தன்மை அற்றது என்றும், அதில் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மையில் எடுத்திருந்த தீர்மானத்தை அரசாங்கத் தரப்பு கடுமையாக விமர்சித்துள்ளது.

சர்வதேச அரசியல் லாபங்களை கணக்கில் கொண்டே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, உள்நாட்டுத் தீர்வுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் விடுத்திருந்த திறந்த அழைப்பை நிராகரித்திருப்பதாக ஆளும் கட்சியின் தலைமைக் கொறடா அமைச்சர்

19-ம் பக்கம் பார்க்க



## தென்னாபிரிக்க தூதுவர் யாழிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான தென்னாபிரிக்க நாட்டின் தூதுவர் குவின்சன் மிச்சேல் யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார்

யாழ்ப்பாணத்திற்குவருகை தந்த அவர், நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டதோடு சங்கிலியன் சிலையினையும் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்

20-ம் பக்கம் பார்க்க

## ரணில் - சந்திரிகா அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விககிரமசிங்க கடந்த 22-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான இந்த சந்திப்பு உத்தியோகபூர்வமற்ற சந்திப்பு என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்புக்கான ஏற்பாடுகளை செய்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, பாணந்துறையில் உள்ள அவருக்கு சொந்தமான வீட்டில் இராபோசன விருந்தையும் ஏற்பாடு செய்திருந்தார்.

சந்திரிகாவுக்கு

19-ம் பக்கம் பார்க்க

# ஐ.நா தீர்மானம் அமுலில் உள்ளதா?

## ஆராய வருகிறார் அமெரிக்க அதிகாரி

(கொழும்பு)

***ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலார் நிஷா தேசாய் பிஸ்வால் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.***



ஜெனிவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக குழுவின் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில், இந்த மதிப்பீட்டை மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இவரை இலங்கைக்கு அனுப்பவுள்ளது.

அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கையின்மனிதவுரிமை மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் எதிர்க் கட்சி பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்து இவர் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயளாளராகப் பதவி வகித்த ரொபேர்ட் ஓ பிளேக்கிற்குப் பதிலாகவே, நிஷா தேசாய் பிஸ்வால் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இலங்கையில் இடம் பெற்ற

19-ம் பக்கம் பார்க்க

## தனியார் பேருந்து சேவைகள் நேற்றைய தினம் பகிஷ்கரிப்பு



(மல்லாவி)

வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் முறைகேடான சேவைகள் இடம்பெறுவதாக தெரிவித்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தனியார் பேருந்துகள் நேற்றைய தினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

இதனால்பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்டது.

வட மாகாணத்தில் வவுனியா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் இப் பகிஷ்கரிப்பினால் போக்குவரத்து சேவைகள் பாதிப்படைந்துள்ளதுடன் பொதுமக்கள் பயணங்களை தொடர்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தால் முறைகேடான விதத்தில் சில இடங்களுக்கு சேவைகள் இடம்பெறுவதாகவும் இதனை நிறுத்தவேண்டும் எனவும் தெரிவித்தே வட இலங்கை தனியார்பேருந்து உரிமையாளர் சங்கத்திற்கு உட்பட்ட சங்கங்களின் உரிமையாளர்கள்சேவை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டி

19-ம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசு பயப்படாது

### ஜெனிவாவில் பதிலளிப்போம் என்கிறார் கருணாதிலக



(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து அதன் எந்தவொரு நட்புறவு நாடும் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுக்கவில்லையென வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

ஜெனீவாவில எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்வில் இலங்கைக்கு எதிராக ஏதேனும் தீர்மானம் கொண்டு வரப்படலாமென இலங்கையின் நட்புறவு நாடுகள் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லையெனவும் அவர கூறினார்.


மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கெதிராக எத்தகைய சவால்கள் வந்தாலும் அதனை சமாளிக்க நாம் தயாராகவேயுள்ளோம்.

அமர்வுகளின் போது இலங்கை

19-ம் பக்கம் பார்க்க

## இந்திய-இலங்கை மீனவர்கள் ஜனவரியில் பேச்சுவார்த்தை

### சல்மான் குர்ஷித் உறுதி



(டெல்லி)

இந்திய-இலங்கை மீனவர்கள் இடையேயான பேச்சுவார்த்தை ஜனவரியில் நடைபெறும் என தமிழக மீனவ பிரதிநிதிகளிடம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் உறுதியளித்தார்.

தமிழகத்தில் இருந்து கச்சதீவு அருகே மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை, இலங்கை கடற்படையினர் தாக்குவதும். படகு, மீன் பிடி வலை போன்றவற்றை சேதப்படுத்துவதும். மீனவர்களை சிறைபிடித்து செல்வதும் தொடர்க்கதையாகி வருகிறது.


இலங்கை கடற்படையின் தாக்குதலை கண்டித்து தமிழக மீனவர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டும் இதுவரை அவர்கள் கோரிக்கை மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், தி.மு.க. எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு. விஜயன் ஆகியோருடன் தமிழக மீனவ பிரதிநிதிகள்,

20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





அகில இலங்கை யாழ். கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானம் மகரஜோதி மண்டல நிறைவு பெருவிழாவை முன்னிட்டு நேற்று ஐயப்பன் யானை மேல் பவனிவரும் நிகழ்வு யாழ்ப்பாணத்தின் பல வீதிகள் வழியே இடம்பெற்றது. இப் பவனியையும் அதில் கலந்து கொண்ட ஐயப்பன் அடியார்களையும் படங்களில் காணலாம்.

# வர்த்தக நிலையங்களின் முன்பாக பொருட்களை காட்சிப்படுத்த அனுமதி

(யாழ்ப்பாணம்)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு யாழ். நகரின் கே.கே.எஸ்.வீதியிலிருந்து பஸ் நிலையம் வரையான மின்சார நிலைய வீதிக்கு இடைப்பட்ட (நவீன சந்தை) உட்பட்ட புடவை மற்றும் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையம் உட்பட வர்த்தக நிலையங்கள் தமது கடைக்கு முன்பாக பொருட்களை காட்சிப்படுத்தி வர்த்தகம் செய்வதற்கு இன்று முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு யாழ்ப்பாண வர்த்தக சங்கத்திற்கும் மாநகர சபையினருக்கும் இடையில் நேற்று விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதன் போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையால் ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் நடைபாதை வியாபாரம் செய்வதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு யாழ கே.கே.எஸ். வீதியலிருந்து பஸ் நிலையம் வரையான மின்சார நிலைய வீதிக்கிடையில் இருக்கின்ற புடவை மற்றும் அழகு சாதன வியாபார நிலையங்கள் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் 3 அடி முன்பாக பொருட்களை காட்சிப்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் மேற்குறிப்பிட்ட பஸ் நிலைய வீதியில் வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மேற்படி வீதியின் இரண்டு பககங்களிலும் உள்ளவர்த்தக நிலையங்கள தமது பொருட்களை 3 அடிக்கு மேல் நீண்டு செல்லாத வகையில் காட்சிப்படுத்தி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பண்டிகைக் காலங்களில் பொது மக்களின நலன்களைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாநகர சபையால் ஒதுக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நடைபாதை வியாபாரம் தடை செய்யப்பட்டிருப்பதர்கவும் இதனை மீறிச் செயற்படுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)


உ
சிவமயம்

"சாமஸ்ரீ தேசமானிய"
விருதுபெற்ற
சிவஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்களிற்கான
பாராட்டு விழாவும் மாணவர் கௌரவிப்பும்
அழைப்பிதழ்

காலம் : 29.12.2013 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 3.00 மணி
இடம் : நல்லை ஆதீனம், நல்லூர்.

தலைவர்
"கற்பகவிநாயக கிரியா உபாசகர்"
சிவஸ்ரீ.பா.செல்வசேனக் குருக்கள்

நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்
வேதபாராயணம்
இறைவணக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்பு நடனம்
வரவேற்புரை : வெ.கோகுலன்
(தேசிய சேமிப்பு வங்கி)

தலைமையுரை
அருளுரை
"ஆகமகிரியாஜோதி"
சிவஸ்ரீ சதா.மகாலிங்க சிவக் குருக்கள்
(செயலாளர். சைவக்குருமார் அர்ச்சகர் சபை)
ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
(நல்லை ஆதீன குரு முதல்வர்)
வாழ்த்துரை
திரு.பா.செந்தில்நந்தனன்
(பிரதேச செயலர். நல்லூர்)
மாணவர் கௌரவிப்பு
வாழ்த்துரை
திரு.மு.திருநாவுக்கரசு (விகடகவி)
(ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி)
விழா நாயகன் கௌரவிப்பு
"சாமஸ்ரீ தேசமானிய" விருதுபெற்ற சிவாச்சார்ய இளவரசு.
"சக்தி கிரியா வியாசர்", "சக்திதாசர்"
சிவஸ்ரீ.சிவ.கமல்ராஜ் குருக்கள்
(பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும், வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)
விழா நாயகனை சபையோர் கௌரவிப்பு
ஏற்புரை
நன்றியுரை
சிவஸ்ரீ.நா.வருணதேவன் ஐயா
S.G.சாந்தன் குழுவினரின் பக்தி கானங்களும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


## மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்திய சாலைக்கு அருகிலுள்ள முச்சந்திப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5.55 மணியளவில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது, மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிளே மேற்படி விபத்திற்குள்ளாகியுள்ளது.

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தொன்றை குறித்த வளைவுப் பகுதியில் மோட்டார் சைக்கிளானது முந்திச் செல்ல முற்பட்டபோது யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் நோக்கி வந்த கப் ரக வாகனம் ஒன்றுடனும் பூக்கன்றுகளை ஏற்றி சென்ற கண்டர் ரக வாகனத்துடனும் மேற்படி மோட்டார்சைக்கிள் மோதி விபத்திற்குள்ளாகியது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் முகம் மற்றும் கை கால்களில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-23)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
முகாமைத்துவக்கற்கைகள் வணிக பீடம்
மனிதவள முகாமைத்துவம் – டிப்ளோமாக் கற்கை நெறிக்கான பரீட்சை ஜனவரி 2013.

மேற்படிக் கற்கை நெறிக்கான பரீட்சை 2014 ஜனவரி மாதம் 11, 12, 18, 19 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தால் விண்ணப்பங்களை இதுவரை கையளிக்காதவர்கள் கற்கை நெறி இணைப்பாளருடன் அலுவலக நேரத்தில் நேரடியாகத் தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை ஜனவரி மாதம் 3 ஆந் திகதிக்கு முன்னராக மேற்கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இப்பரீட்சைகளுக்குரிய நேரசூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடவும்.

பதிவாளர். (C-5934) டிசெம்பர் 26, 2013


## இரு நாட்களில் 517 பேர் கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்யும்விசேடபொலிஸ சுற்றிவளைப்புகளின போது25ஆம் 26, திகதிகளில் 517 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத் தியேஅதிகளவானவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேல் மாகா ணத்தில் இதன்போது 234 பேர் கைதாகியுள்ளனர்.

இது தவிர விபத்துக்கள் காரணமாக 546 பேர் கொழும்பு தேசியமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில்201பேர் தொடர்ந்தும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக தேசிய மருத்துவமனையின் பேச்சாளர் தெரிவித்தார்.

வீதி விபத்துக்களில் சிக்கிய நிலையில 114 பேர்கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர கேளிக்கை மற்றும் வாண வேடிக்கை விபத்துக்கள் காரணமாக காயமடைந்த 2 சிறார்களும் இதன்போது சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (செ-11)


விற்பனைக்கு

நம்பர் 1 நியூபேனார்ட் (New Bernards) கிறீன்வலி(Green valli), ஊர்க்கோழிக்குஞ்சு ஆகிய கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு : செல்வரெட்ணம்
077 8448295, 077 6176370
(C-5946)

விஸ்டம்
தொழில்நுட்பக் கல்லூரி
475, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
[வண்ணார்பண்ணை சிவன் கோவிலடி]
A/L 2016 தொழில்நுட்பப்பிரிவு
ஆரம்பம் 01.01.2014 காலை 8.00 மணிக்கு அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
அலுவலக நேரம் காலை 7–11.
T.P : 077 248 7774, 021 320 7315
(5173)

விஸ்டம்
தொழில்நுட்பக் கல்லூரி
475, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
இரசாயனவியல் A/L 2016
தமிழ், ஆங்கில மொழி மூலம்
28.12.2013
Sat & Sun - 4.00 Pm
A.Aravinthan Bsc (Hons) Spl.chem
(5173)

கார் விற்பனைக்குண்டு

SUZUKI, SWIFT ரகயப்பான் (JAPAN) கார் HG XXXX இலக்கமுடைய A/C FULL Option Auto Conrol Lock, DVD TV, Alloy Wheel Rixerze Camara Sub Whober உடன் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு :–
T.P : 077 188 2119
(C-5941)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நல்லபெயர் வாங்குவது எப்படி?

"நான் நல்ல காரியம் எல்லாம் செய்திருக்கிறேன் இருந்தாலும் எனக்கு ஒரு பெரிய குறை" என்று ஒருவர் கூறினார்.

"என்ன குறை?" என்று கேட்டார் இன்னொருவர்.

"என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை! அதுதான் குறை" என்றார்.

நல்ல செயல்களை செய்பவன் என்பது வேறு ! நல்லவன் என்று பெயர் எடுப்பது வேறு.

நல்ல பெயர் வாங்குவது என்பது இலகுவான காரியமா?

அது சரி எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்குவது எப்படி?

இதற்கு ஒரு அனுபவசாலி சில வழிகளைக் கூறுகிறார் .

முதலாவது வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டிப் பழக வேண்டும் .

சில பேர் எப்படியென்றால் மற்றவர்கள் ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு பதிலாக அவர்கள் மேலே பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறார்கள் அல்லது அவர்களிடம் பேசுவதை நிறுத்திக் கொள்கிறார்கள்.

அதனால் நமது பெயரும் கெட்டுப் போகிறது.

இரண்டாவது வழி பிறர் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

உங்களுக்கு பக்கத்தில் இருப்பவருக்கு தலை வலி. உங்களிடம் மாத்திரை இருக்கிறது. அப்படி என்றால் அதில் ஒன்றை அவருக்கு கொடுத்து உதவுவது.

அந்தத் தலைவலி நீங்கள் பக்கத்தில் இருப்பதால் வந்திருக்கலாம்.

மற்றவர்கள் ஒரு தவறு செய்து விட்டார்கள் என்றால் அதை மறைமுகமாக சுட்டிக்காட்ட வேண்டும். "ஐயையோ! இப்படி செய்துவிட்டீர்களே" என்று ஆரம்பிக்கக் கூடாது. தவறு என்பது திருத்திக் கொள்ளக் கூடியதுதான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும் .

"பரவாயில்லை இனிமேல் இது மாதிரி நடக்காமல் பார்த்துக் கொள்ளவும்!" என்று சொல்ல வேண்டும்.

மூன்றாவது வழி உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது! அவரும் முக்கியமானவர்தான் என்பதை அவரே உணர்கிற அளவுக்கு நீங்கள் நடக்க வேண்டும்.

அவருடைய ஆலோசனைகளையும் அடிக்கடி கேளுங்கள். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று கேளுங்கள் .

அவரை கதைப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள் . நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டு இருக்க வேண்டாம். அவர் பேசுவதை பொறுமையாகக் கேளுங்கள். அப்போதுதான் உங்கள் மேல் அவருக்கு ஒரு நல்ல அபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டு இருக்கிறீர்கள். அதுமாதிரி வாக்குவாதங்களில் இருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதில் இருந்து ஒதுங்குவதுதான் சிறந்த வழியாகும்.

நான்காவது விடயம் என்னவென்றால் மற்றவர்களை மகிழ்ச்சி அடைய வைப்பதன் மூலம் நாங்களும் மகிழ்ச்சியடைவது.

சிலருக்கு அடுத்தவர்களை அதிர்ச்சியடைய வைத்து வேடிக்கை பார்ப்பது என்பது ஒரு தனியான சுவாரஸ்யம். அது மிகவும் பிழையான விடயம். நல்ல பெயர் வாங்குவது எப்படி என்பதை ஒரு வெளிநாட்டு நிபுணர் இவ்வாறு தன் கருத்து மூலம் தெரிவிக்கின்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறி தரம் ஒன்று க்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண நிலையத்தில் தமிழ் மொழி மூலம் நடைபெறும் இக்கற்கை நெறிக்கு கட்டணமாக 12 ஆயிரத்து 500 ரூபா செலுத்துதல் வேண்டுமென நூலகர் சங்கம் அறிவித்துள்ளது.

இக்கற்கை நெறியானது, நூலக தகவல் விஞ்ஞானத்துறை சார்ந்த பல்வேறு தொழில்களுக்கான புகுமுக தகைமையாக விளங்குகிறது. மேற்படி கற்கை நெறியானது யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடாத்தப் படுகிறது. இதற்கான விண்ணப்ப தகைமைகளாக,

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக் கழகம்ஒன்றில்பெற்ற பட்டம் அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில்சித்தி பெற்றிருப்பது டன், அவற்றுள் மொழியில் திறமைச் சித்தியும் கணிதம், தூயகணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

கற்கை நெறி தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக்கொள்வதற்கு 15 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டு சுயமுகவரியிடப்பட்ட கடித உறையை (9"X4") இலங்கைநூலகச்சங்கத்தின் பெயரில் பெறப்பட்ட 200 ரூபா பெறுமதியானதும் ஹொறிங்டன் உப தபால் அலுவலகத்தில் மாற்றக் கூடியதுமான காசுக் கட்டளையையும்

Education Officer, Sri Lanka Library Association, 275/75, The Professional Centre, Stanley Wijesundera Mawatha, Colombo-07 Tel/Fax: 011-2589103 E-mail: slla@sltnet.lk or slliba@yahoo.com

என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களை யும் கற்கை நெறி தொடர் பான விபரங் களையும் www. slla org.lk இணையத்தில் பார்வையிடலாம். இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் போது, அத்துடன் மேற்குறிப்பிட்ட காசுக்கட்டளையும் இணைக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது இலவசமான கற்கை நெறிகளை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்.மாவட்டத்திலுள்ள எமது தொழில் பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக இவ் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கட்டட நிர்மாண தொழில்நுட்ப உதவியாளர், வீட்டு மின்இணைப்பாளர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) மர வேலை தொழில்நுட்பவியலாளர் (தளபாடம்) நீர்குழாய் பொருத்துநர், வெளி இணைப்பு இயந்திரம் திருத்துநர், அலுமினியப் பொருத்துநர், வீட்டுமின்சார உபகரண திருத்துநர், விவசாய உபகரண திருந்துநர், மின்மோட்டர் கம்பி மீள் முறுக்குநர் (வைண்டிங்) ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேற்குறித்த கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தகைமை (NVQ) சான்றிதழ்களுக்கான பயிற்சிகள் ஆகும்.

இக்கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம் இல 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் மேற்கொள்ளலாம். அல்லது தொலைபேசி இலக்கமான 021 222 7949 தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பதிவுகள் அனைத்தும் எதிர்வரும் ஜனவரி மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படல் வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 30 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 120 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 |
| கோவா | 15 | 30 | 40 |
| கரட் | 40 | 60 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 35 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90-210 | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 120 | 100 |
| பாகற்காய் | 160 | 80 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 60-80 | 100 | 80 |
| லீக்ஸ் | 70 | 50 | 100 |
| பீற்றூட் | – | 30 | 100 |
| கறிமிளகாய் | 100 | 50 | 160 |
| முருங்கைக்காய் | – | – | 320 |
| போஞ்சி | 80 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 70 | – | 80 |
| கீரை – 1 பிடி | 20 | 25 | 35 |
| தேசிக்காய் | 60-70 | 10 | 80 |
| [illegible] | [illegible] | 40 | 30-40 |
| இராசவள்ளி | [illegible] | 120 | 160 |

# இராசி பலன்

28.12.2013
(மார்கழி 13, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 1.14 மணிவரை
சுவாதி பிற்பகல் 4.23 மணிவரை
இராகுகாலம் 9.28-10.58 மணிவரை
சுபநேரம்3.28-4.58மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்

**மேடம்** பொன்னான நாள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக பேசி சமாளிப்பீர்கள், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற் கொள்வீர்கள், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையானசெய்திகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** மாமன் மைத்துனர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பிள்ளைகள் நலன் கருதி சுப செலவுகள் செய்யும் எண்ணம் உருவாகலாம்.

**கடகம்** மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் தோன்றும், தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப் போடு தொழில் முன்னேற்றம் ஏற்படும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பணியாளர் தொல்லை அகலும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** தொழிலில் புதிய பொறுப்புகளை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது, பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, போஜன சுகமுண்டு, கனவுப்பலிதம் உண்டு.

**விருச்சிகம்** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, பிதா சிந்தையுண்டு, சுப செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்** ஆடம்பரப் பொருட்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், கடின உழைப்பில் ஈடுபாடு காட்டுவீர்கள், தொட்டகாரியம் வெற்றி பெறும்.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசி தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், புதிய முயற்சிகள் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு, உடல் நலம் சீராகும்.

**மீனம்** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்பட்டு விலகும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றைகள் சூழ்ந்த நிலையில் எள்ளாங்குளம் மயானம்

(கரணவாய்)


கரணவாய் நவிண்டில் எள்ளாங்குளம் மயானம் சீரற்ற முறையில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட குறித்த மயானம் பாதுகாப்பின்றி பற்றை சூழ்ந்து காடாக காணப்படுகின்றது.

இதனால் மயானத்துக்கு செல்வோர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வாறாக மயானம் துப்புரவின்றி காணப்படுவதாக நவிண்டில் பகுதியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் சபையினரின் கவனத்துக்கு கொண்டு சென்ற போதிலும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, இம் மயானத்தை துப்புரவு செய்து பொதுமக்களின் பாவனைக்கு இடையூறு விளைவிக்காத வகையில் பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)




# பசுக்கள் கொல்லப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## யாழ்.மாநகர சபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பசுக்கள் கொல்லப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என யாழ்.மாநகரசபை திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

யாழ்.மாநகரசபையின் இந்த வருடத்திற்கான இறுதி மாதாந்தப்பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் காலை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் பசுக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். இந்து மக்களும் இந்து ஆலயங்களும் அதிகமாக காணப்படுகின்ற பாரம்பரியமிக்க பிரதேசத்தில் வழி பாட்டுக்குரிய பசுக்கள் வதைக்கப்படுவதை ஒரு போதும் ஏற்க முடியாது என முதல்வர் உட்பட பெரும்பான்மையான ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்ட பகுதியில் பசுக்கள் கொல்லப்படுவதை நிரந்தரமாக தடைசெய்வது என சபை ஏகமனதாக தீர்மானித்தது.

இதேவேளை பசு வதைக்கப்பட்டு மற்றும் கொல்லப்படுவது தொடர்பான விவாதம் சபையில் ஆரம்பிக்கப்பட்ட போது ஆளும் கட்சி உறுப்பினரான ம.மங்களநேசன் சபை உறுப்பினர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தும் வகையில் கருத்தொன்றை முன்வைத்தவாறு வெளியில் சென்றார்.

அதாவது முட்டை போடும் கோழியை நாம் உண்ணும் போது ஏன் பசுமாட்டை உண்ணக்கூடாது என்று அவர் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)




# அரச ஊழியர்களை இடைநடுவில் இறக்கி விட்ட தனியார் பேருந்து

பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய பிரதேசங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து இடையில் தனது சேவையை நிறுத்தியமையால் அலுவலர்கள் பல சிரமங்களுக்குட்பட்டனர்.

இச் சம்பவம் நேற்றுக்காலை இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்குறித்த பிரதேசங்களில் பணியாற்றும் அரச அலுவலர்கள் தனியார் பேருந்தில் பணிக்குச் செல்வது வழமை.

இதே போன்று நேற்றைய தினம் தனி யார் பேருந்து பகிஷ்கரிப்பின் மத்தியிலும் தனியார் பேருந்து சேவை இடம் பெற்ற மையால் அரச அலுவலர்கள் குறித்து பேருந்தில் ஏறியுள்ளனர்.

பேருந்து நடத்துநரும் வழமை போன்று பருத்தித்துறையிலிருந்து கிளிநொச்சிக்கு நூறு ரூபாவும், நெல்லியடியிலிருந்து கிளிநொச்சிக்கு செல்ல 90 ரூபாவும் அறவிட்டுள்ளார்.

ஆயினும் இப்பேருந்து தனது சேவையை கொடிகாமத்துடன் நிறுத்தியுள்ளது. இதனால் அரச அலுவலர்கள் சிரமங்களுக்குட்பட்டுள்ளதோடு ஏற்கனவே தமக்கு பேருந்து கிளிநொச்சி வரை செல்லாது என கூறியது ஏன் எனக் கேள்வியெழுப்பியுள்ளனர்.

தனியார் பேருந்து சேவை இடம் பெறாவிட்டால் அரச பேருந்தில் பணிக்கு சென்றிருக்கலாம் எனக் கூறியுள்ள அவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை இனிவரும் நாட்களில் மேற்கொள்ளாத வகையில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)

# கல்விசாரா ஊழியர்கள் 17 பேர் சாகும் வரை உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வழங்கப்பட்ட உறுதி மொழிகளை நிறைவேற்றி வெற்றிடமாகவுள்ள வேலை வாய்ப்புக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பல்கலைக்கழகத்தில் மீளவும் வேலையில் இணைத்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து யாழ்.பல்கலைக்கழகத்தில் பாதிக்கப்பட்ட கல்விசாரா ஊழியர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக்காலை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் கல்வி சாரா ஊழியர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழகத்தில் (கல்விசாரா) ஊழியர் வெற்றிடங்கள் நிலவிய போது பல்கலைக்கழக ஆணைக்குழுவின் 1989 ஆம் ஆண்டு சுற்றுநிருபத்துக்கு அமைவாக பல்கலைக்கழக ஊழியர்களின் பிள்ளைகளாகிய நாங்கள் 17 பேர் அமைய அடிப்படையில் உள்வாங்கப்பட்டு வேலைகள் பொறியியலாளரின் மேற்பார்வையில் பராமரிப்பு பகுதியில் கடமையாற்றி வந்தோர் இந் நிலையில் தொழிலாளி வெற்றிடத்துக்கான நிரந்தர ஊழியர் தரம் (III) இற்கான ஆட்சேர்ப்பின் போது நாங்கள் 17 பேரும் உரிய தகைமைகளைக் கொண்டிருந்தும் இங்கு வேலையில் இருந்த நிலைமையிலும் பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாட்டில் எதுவித காரணமும் காட்டாது முன்னறிவித்தல் எதுவும் இன்றி வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளோம்.

புதிய ஊழியர்கள் வேலைக்கு உள்வாங்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் நிர்க்கதியாக வேலையிழந்து நின்ற நாங்கள் 17 பேரும் எமக்கு உரிய நியாயமான தீர்வைக் கோரி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினை கடந்த ஒக்டோபர் மாதம் 21 ஆம்




திகதி அன்று நடத்தியிருந்தோம்.

அதன் போது பல்கலைக்கழக பதிவாளரால் எமது நியாயமான கோரிக்கைகளைப் பல்கலைக்கழகம் சாதகமாக பரிசீலிக்கப்படுமென குறிப்பிட்டு உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றை வழங்கினார்.

அக் கடிதத்தில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு தங்களின் பெயர்ப் பட்டியலை பல்கலைக்கழகத்தின் தகுந்த சிபாரிசின்படி அனுப்பி வைத்து வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்குவதற்கும் பேரவையிடம் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படும் என்றும் பல்கலைக்கழக பேரவையின் கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்திலும் தங்களுடைய கோரிக்கைகள் சாதகமாக பரிசீலனை செய்வதற்காக முன் வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு எழுத்து மூலமாக பிரதித் தொழில் ஆணையாளர், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் முன்னிலையில் துணைவேந்தரின் அனுமதியுடன் கடித்தை வழங்கி எமது உண்ணாவிரதப் போராட்டத்தினை கைவிடுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க எமது போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இவ்வாறான நிலையில் எமக்கு உரிய தீர்வுகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இது வரைமேற்கொள்ளப்படவில்லை. எனவே தொழில் இழந்து நிர்க்கதியாக உள்ள எமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறை வேற்றி வெற்றிடமாக உள்ள வேலைவாய்ப்புக்களுக்கு முன்னுரிமையில் எம்மை மீளவும் வேலையில் இணைக்குமாறு கோருகின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# திறப்புவிழா

உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் இலவச ஆயுர்வேத நிலையத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கட்டடத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் சியாமா துரைரட்ணம் திறந்து வைக்கவுள்ளார்.

இந் நிலையத்தில் இலவச ஆயுர்வேத சிகிச்சைகள் பிரதி ஞாயிறு தோறும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும். (அ-2)

# சாவ.நகராட்சி மன்ற உள்ளூ.வார நிகழ்வு

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபத்தில் நகர பிதா இ.தேவசகா யம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் கே.சயந்தன், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ. ஜக்சீல், சாவ.டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன், இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி மின்அத்தியட்சகர் அ. அன்ரன் ஞானப்பிரகாசம், மக்கள் வங்கியின் சாவகச்சேரி முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

உள்ளூராட்சி வார சிறப்பு மலரின் வெளியீட்டுரையை நூலாசிரியரும் சாவகச்சேரி நகராட்சிமன்ற செயலாளருமான கா.சண்முகநாதனும், மதிப்புரையை ஆசிரியர் ச.மார்கண்டும் நிகழ்த்தவுள்ளனர். நிகழ்வில் பரிசில் வழங்கல், கலை நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளன. (அ-9-29)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக கல்விசார் பதவிகளுக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்க

## யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அறிக்கை

கல்விசார் பதவிகளுக்கு பொருத்த மானவர்களைத் தெரிவுசெய்வது நிர்வாகப் பொறுப்புக்களைக் கொண்டிருக்கும் சிரேஷ்ட கல்விமான்களின் கடமையாகும். இந்தக் கடமையானது மனச்சான்றுக்குக் கட்டுப்பட்ட ஒன்றாக நிறைவேற்றப்பட வேண்டுமென பல்கலைக்கழக சமூகத்தினரும், பொதுமக்களும் உரிமையுடன் எதிர்பார்க்கின் றனர் என யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அச்சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறைந்த தரத்திலுள்ளவர்களைத் தெரிவதற்காக, உறுதிப்படுத்தப்பட்ட மேம்பட்ட கல்வித்தகைமையுடைய விண்ணப்பதாரியை இதே சிரேஷ்ட கல்விமான்கள் புறக்கணித்து வாதம் செய்வதைப் பார்த்துப் பார்த்து நாம் மேலும் மேலும் மனக்கலக்கத்துக்கு உள்ளாகிறோம்.

இதற்காக அவர்கள் கூறும் பொதுவான காரணங்கள் - தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையில் திறமாகப் பிரகாசித்தார் அல்லது அவரின் அளிக்கை திறமாகவிருந்தது என்பவை - தாங்கள் ஒழுங்கு மீறி நடந்ததால் அவர்கள் மனதைக் குழப்பும் ஏதோ ஒன்றை மூடி மறைக்க முயல்வதையே காட்டுகிறது.

இன்றைய தெரிவுகளே இனிவரும் பல் வருடங்களுக்கு பல்கலைக் கழகத்தின் தரத்தையும் அறிவுச் சூழலையும் நிர்ணயிப்பன. இதனால் கல்விசார் பதவிகளுக்குரிய தேர்வு முறை பற்றிய விபரங்களுக்கு புத்துயிர் கொடுக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

ப.மா.ஆணைக்குழுவும் ஒரு (தகுதி காண்) விரிவுரையாளருக்கு முதல் பிரிவாக பொருத்தமான பாடத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) ஐக் குறித்துள்ளது. முதல் பிரிவில் தேர்வுநாடிகள் இல்லாதவிடத்துதான் ஏனைய பிரிவுகள் கருத்தில் கொள்ளப்படும். இதனைப் பின்பற்றாவிட்டால்பேரவையானது ப.மா.ஆணைக்குழுவிற்கு தமது தெரிவை நியாயப்படுத்த வேணடும்.

பா.மா.ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 935 இவ்வாறு கூறுகிறது.மிகச் சிறந்த சான்று பகரப்பட்ட ஆவணத்தையுடைய தேர்வுநாடியை, அவரின் கற்பிக்கும் திறனில் ஏதாவது சந்தேகம் இருப்பின், தற்காலிக பணிநிலையில் அமர்த்த வேண்டுமென்பதையும், ஒரு வருடத்தின் பின் மீண்டும் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட வேண்டுமென்பதையும் மீறமுடியாத நடைமுறையாக்குகிறது. அளிக்கைக்கு மேலாக கல்வித் தகைமைக்கு வழங்கப்பட்டுள்ள கனதியை இது தெளிவாக்குகிறது.

விஷேட பட்டம் பெற்ற ஒரு தேர்வு நாடி 120 பாடக்கூறுகளில், சுமார் 50 அரையாண்டு இறுதி வினாத்தாள்கள் மூலம், (ஏராளமான பயிற்சிக்கால மதிப்பீட்டுக்களுடன்) பத்துக் கணக்கான பரீட்சகர்களால் சோதிக்கப்படுகிறார். ஒவ்வொரு விடைத்தாளும் அனுபவம் வாய்ந்த பரீட்சகர்களால் இரண்டு முறை புள்ளியிடப்படுகிறது. இத் தேர்வுநாடி பரீட்சை மண்டபங்களில் வினாத்தாள்களுக்கு விடையளிக்க பலநூறு மணித்தியாலங்கள் செலவிட்டுள்ளார். இவ்வளவு செய்கைகளின் விளைவின் அளவைப் பொறுத்தே முதலாம் வகுப்பு வழங்கப்படுகிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் துறைத் தலைவர் ஒருவரே தெரிவுச் சபையில் உள்ளவர்களில் பாடத்தில் வல்லுநர் ஆவார். நிமிடக்கணக்கில் மட்டுமே நடாத்தப்படும் சுருக்கமான நேர்முகத் தேர்வில் தேர்வு நாடியிடம் கேட்கப்படும் சில கேள்விகளின் அடிப்படையில், மேலே விபரிக்கப்பட்ட முறையில் ஒரு தேர்வுநாடியினால் பெறப்பட்ட பெறுபேறுகளை நிராகரிப்பது இந்தத் தெரிவுச் சபைக்கு இவ்வளவு இலேசான காரியமா?

இன்னொரு விதத்தில் கூறுவதானால்: ஒரு கல்விசார் பதவிக்கு எவரை தெரிவுச்சபை தேர்ந்தெடுக்க வேண்டும். அளிக்கையில் பெரிய திறமை காட்டாத கூரறிவு படைத்த ஒரு புதுப் பட்டதாரியையா அல்லது அவரிலும் மேம்பட்ட அளிக்கைத் திறனுடைய குறைந்த தகைமையுள்ள ஒருவரையா?

பலவருட கால போரும் இடம்பெயர்வும், எமது மாணவர்கள் ஆங்கில மொழியில் பரீட்சயத்தையும், பிறரைக் கவரக்கூடிய வகையில் தன்னை காட்டும் இயல்பையும் பெறுவதற்குரிய வாய்ப்புக்களைத் தடுத்துவிட்டன. இச் சூழலில், தமக்கு நேர்ந்த இடர்பாடுகளிலிருந்து மீள்வதற்கும், 4 வருட பல்கலைக்கழக கல்வியை சிறந்த முறையில் முடித்தற்குமாக தாம் மேலும் முன்னேறுவதற்கு இந்த மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

மெய்மைக் கூறுகளைவிட்டு விட்டு, ஒருவரின் விருப்பங்களையும் கருத்துக்களையும் சார்ந்திருக்கும் நேர்முகம் ஆற்றுகை போன்றவற்றில் தங்கியிருக்கும் தேர்வு முறையானது, தாழ்நிலையிலிருந்து வரும் உயர்திறனுடையவர்களைப் பின்தள்ளி, மேன்மட்ட தொடர்புகளும் செல்வாக்கும் உள்ளவர்களுக்கு சார்பாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-செ)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்:- 14,ஆதன இலக்கம்:- 152 (புதிய ஆதனம்)
கல்வளை றோட்

வட்டாரம் 14 கல்வளை றோட் ஆதன இலக்கம் 152 (புதிய பதிவு) அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை) *கல்வளை* என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு நாலேகால் (நில.பர 4 1/4) கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த கந்தையா மகேந்திரன் அவர்களால் அறுதி உறுதி மூலம் அதே ஊரைச் சேர்ந்த தர்மலிங்கம் கேதீஸ்வரன் ஆகிய இவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் தம்பையா விக்னராசா முகதாவில் நிறைவேறிய 1295 ஆம் இலக்க 2012.01.17 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். *கல்வளை* நிலப்பரப்பு நாலேகால் உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் தர்மலிங்கம் கேதீஸ்வரன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதனை அறியத்தருகின்றேன். (5170)

தவிசாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலக சனசமூகநிலையத்தின் ஏற்பாட்டில் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பொது நூலகத் தகவல் தொழில் நுட்பமையத்தில் இடம் பெறும். இதில் தற்கால தொழில் வாய்ப்புக்கள், நவீன தகவல் தொழில் நுட்பம், உயர்தரம் கற்கவிருக்கும் மாணவர்களுக்கான பாடத்தெரிவுகள் தொடர்பான விடயங்கள் என்பன ஆராயப்படவுள்ளன. இக் கருத்தரங்கை பல் கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் துறை சார் நிபுணர்கள் வழங்கவுள்ளனர். (அ-2)


அரிய புகைப்படங்களுடன்

அன்பு வாசகர்களே!

பொன்மனச் செம்மல்
Dr. M.G.R. இன்
வாழ்க்கைச் சரிதம்
01.01.2014 முதல்
உங்கள்
வலம்புரியில்...





கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 9 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, QS / கனியவளவாளர் (புருனை - PR)
தொ.இ: B/2700

பிறப்பு: 1984 இந்து (Do)
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 40 ¾ செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: O/L / படவடிவமைப்பாளர்
தொ.இ: B/573

பிறப்பு: 1956 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 30 ½ செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: வங்கியாளர்
எதிர்பார்ப்பு: விதவையாயினும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: B/574

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: 40 ¼ செவ் 8 இல்
உயரம்: 5'6" தகைமை/தொழில்: IT / Computer Programmer
தொ.இ: B/576

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 78 உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
தொ.இ: G/940

பிறப்பு: 1969 இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 29 ½
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/944

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 24 சூரி. செவ். 5 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA, MA / விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/945

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 51 ¼ செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Com, HNDA / பட்டதாரி பயிலுநர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/950

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க செயற்பாட்டுக்காக நம்பிக்கை வாக்குகளை வழங்குக

## சர்வதேசத்தை கோருகிறார் பீரிஸ்

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்புக்களுக்காக சர்வதேச சமூகம் தமது நம்பிக்கை வாக்குகளை வழங்க வேண்டுமென அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இலங்கை அரசாங்கம் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் அனைத்து மக்களினதும் சமயங்களினதும் அரசியல் பிரிவுகளினதும் உறுதித்தன்மையை கட்டியெழுப்ப இலங்கை அரசாங்கம் முயற்சிக்கிறது.

இதனை கருத்திற்கொண்டே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, சுமார் 300 இலக்குகளை கொண்ட நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்துள்ளார்.

2012 , 2013 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் நல்லிணக்க செயற்



பாடுகளை விரைவுபடுத்தும் கோரிக்கைகளை நிறைவேற்றியிருந்தது.

இந் நிலையில் 2014 ஆம் ஆண்டு மார்ச்சில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் பேரவை, சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோரும் பிரேரணையை சமர்ப்பிக்கவுள்ளது.

எனினும் இவ்வாறான அச்சுறுத்தல் நடவடிக்கை இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளை குழப்பிவிடும் என்று அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமது பிரச்சினைகளை தாமே தீர்த்துக்கொள்ளும் பொறிமுறையை கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் பிரசாரம் காரணமாக சில நாடுகள் இலங்கையின் சுய விசாரணைகளை ஏற்கவில்லை என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வீதியை புனரமைக்குக

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 8 ஆம் வாய்க்காலில் உள்ள சேதமடைந்த வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இவ்விடத்தின் மையத்தில் அமைந்துள்ள வீதியொன்று ஏற்கனவே கிரவல் இடப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்தது.

ஆயினும், வீதியின் இருமருங்கிலும் வடிகான் அமைக்கப்படாமையால் மழைநீர் தேங்கி நின்று வீதி சேதமடைந்துள்ளது.

தற்போது சிறிதளவாக சேதமடைந்திருக்கும் இவ்வீதியை உடன் செப்பனிடாவிடின் மிக மோசமாக இவ்வீதி சேதமடையும் வாய்ப்புள்ளது.

எனவே சேதமடைந்துள்ள இவ்வீதியின் பகுதிகளை புனரமைப்புச் செய்வதோடு வடிகான்களையும் அமைக்க வேண்டுமென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-9-254)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# முல்லை மாவட்ட இலக்கிய விழா

முல்லைத்தீவு மாவட்ட கலாசார விழா நேற்று கற்சிலைமடு அ.த.க பாடசாலையில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின்பிரதமவிருந்தினராக முல்லை. மாவட்டச் செயலாளர், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட உதவிச் செயலாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முல்லை கலை, இலக்கிய, சமூகப் பொருளாதார பண்பாட்டு ஆய்வில் எனும் தலைப்பிலான ஆய்வரங்கம் கற்சிலைமடு அ.த.க பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் முல்லை நாட்டார் கலை இலக்கிய பின்னணி எனும் தலைப்பில் துணுக்காய் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரிபுத்திரி கிருபாகரன், முல்லை வாழ்வியலோடு இணைந்த கலைப் பாரம்பரியமும் என முத்தையன்கட்டு சைவப்புலவர் ப.திலகானந்தன், முல்லை பாரம்பரிய கூத்துக்களும் கலைப்பாரம்பரியம் என கலைஞர் என்.எஸ். மணியம் அண்ணாவி, முல்லை இலக்கிய தடங்களின் ஓர் பார்வை என கவிஞர் வே.முல்லைத்தீபனும் ஆய்வரங்கத்தில் ஈடுபட்டனர். (அ-9-15)




# சாரணர் தலைவர்களுக்கான அவத்தை-1 பயிற்சி இன்று

வடமாகாண கல்வியமைச்சின் நிதியுதவியுடன் சாரணர் தலைவர்கள் (ஆசிரியர்கள்) மற்றும் குருளை சாரணர் தலைவர்களுக்கான அவத்தை-1 பயிற்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி (டி-7) இல் நடைபெறும்.

இப்பயிற்சியானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நடைபெறவுள்ளதாக ஊடகத்திற்கான உதவி மாவட்ட ஆணையாளர் ஜனாதிபதி சாரணன் யோ.கேதீசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சாரணர் செயற்பாடுகள் மற்றும் சாரணர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பற்றிய கலந்துரையாடல் வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா தலைமையில் கடந்த 14 ஆம் திகதி வடமாகாண கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அதன்போது வடமாகாணத்தில் உள்ள சாரணர் மாவட்டங்களான வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு அமையவே சாரணர் பயிற்சி விடயம் அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மர்மப் பொருள் வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயம்

முல்லைத்தீவு, தேவிபுரம் பகுதியில் மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்து முல்லைத்தீவு முள்ளியவளை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இதில், செல்வராசா சுதாகரன் (வயது 6) என்ற சிறுவனே படுகாயமடைந்துள்ளான்.

மேற்படி பிரதேசத்தில் பயிர்ச் செய்கைக்காக நிலத்தை உழவு இயந்திரத்தின் மூலம் பண்படுத்திய போது மர்மப்பொருள் ஒன்று நிலத்திலிருந்து வெளியில் வந்தது. இதன் போது, அங்கு விளையாடிக் கொண்டிருந்த மேற்படி சிறுவன் அம்மர்மப்பொருளை எடுத்தபோது அது வெடித்துள்ளது.

புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மேற்படி சிறுவன் மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு, முள்ளியவளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)

# வடக்கு மாகாணசபையின் ஏற்பாட்டில் மக்கள் குறைகேள் நிகழ்வு

(பூந்தோட்டம்)

வட மாகாணசபையால் மக்களிடம் இருந்து அவர்களது பிரதேசங்களில் காணப்படும் பிரச்சினைகளை அடையாளம் காணும் குறைகேள் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வட மாகாணசபைக்குட்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் அமைச்சர்கள் தலைமையில் அபிவிருத்தி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இக் குழு மக்களிடமிருந்து அவர்களின் கிராமங்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை அடையாளம் காணும் செயறபாட்டில் ஈடுபட்டு வருகின்றது.

அதன் ஓர் அங்கமாக வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் தேவைகள் அடையாளம் காணப்பட்டன.

இவ் விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவரான வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்திடம் கேட்டபோது, வட மாகாண சபையால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களை மக்களிடம் இருந்து அடையாளம் காணுவதற்காக இச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றோம்.

மக்கள் சந்திப்பின் பின்னர் திணைக்கள தலைவர்களை சந்தித்து அவர்களிடம் மக்களுக்கான தேவைகள் தொடர்பில் ஆராயும் கூட்டங்களை நடத்தி, தொடர்ந்து அந்தந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச சபை உறுபபினர்களுடன் கலந்துரை யாடி அவர்களிடம் உள்ள மக்களுக்கான தேவைகளை இனம் கண்டு இறுதியாக தேவைகளை வகைப்படுத்தி அறிக்கையொன்றை எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வட மாகாண முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

அதன் பின்னர் பாதீட்டின் அடிப்படையில் பணிகளை முன்னெடுக்க இக்குறைகேள் திட்டம் உதவியாகவிருக்கும் என தெரிவித்தார். (அ-9-266)

# கரைதுறைப்பற்றுக்கு புதிய பிரதேச செயலர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக திருச்செல்வம் திரேஸ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வந்த பிரதேச செயலர் பொன்னுத்துரை குகநாதன் ஐந்து மாதங்களுக்கு முன்னர் மாற்றப்பட்டதையடுத்து, பதில் பிரதேச செயலாளராக வெலிஓயா பிரதேச செயலர் சிறிமாண்ணா இதுவரை கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தின ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக கடமையாற்றிய திருச்செல்வம் திரேஸ்குமார் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலாளர் திருச்செல்வம் திரேஸ்குமார் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதுடன், பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுடனும் பிரதேச செயலகத்தின் நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார். (அ-9-250-267)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆங்கில பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் Steps Institute இல் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான புதிய ஆண்டுக் கான ஆங்கில பயிற்சி நெறி ஆரம்பிக்கப் படவுள்ளதாக அலுவலக நிர்வாகி செ.தேவரஞ்சன் அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பங்களை நிறுவன அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் அனுமதிப்பரீட்சை எதிர் வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


## காணி பதிவக பணிகள் இடைநிறுத்தம்

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலுள்ள காணி மாவட்டப் பதிவகத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதியன்று பிறப்பு, இறப்பு, விவாகம் மற்றும் காணி தொடர்பான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என யாழ். காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழமை போல் அனைத்து சேவைகளும் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சர்வதேச சமூகத்தை சமாளிக்கவே அரசு எம்மை பேச்சுக்கு அழைக்கின்றது

## சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



**(கொழும்பு)**

**பாராளுமன்ற தெரிவுக் குழுவின் மூலம் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கப் போவதில்லை. மாறாகள 13 ஆவது திருத்தத்தை முற்றாக அழிக்கும் செயற்பாடாகவே அது அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேசத்திடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே அரசாங்கம் எம்மை பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கின்றது. அரசாங்கத்தை காப்பற்றுவதற்காக தமிழ் மக்களை காவு கொடுக்க நாம் தயாரில்லை என அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் நாட்டில் சமாதானத்தினை எதிர்பார்த்திருந்தால் எம்முடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கு வந்திருக்க முடியும். பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு அழைத்து எமக்கான தீர்வினை அரசாங்கத்தினால் ஒரு போதும் கொடுக்க முடியாது.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் 31 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களில் 3பேர் மாத்திரமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை சார்ந்தவர்கள். ஏனைய அன்னவரும் சிங்கள பேரின வாதத்தினர்.

எனவே அவர்களிடம் பேசி எமக்கான தீர்வினை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்.

நாம் இதுவரையில் அரசாங்கத்துடன் 18தடவைகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம். எமது மக்களின் உண்மை நிலைமையை இச்சந்தர்ப்பங்கள் அனைத்திலும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஆனால் ஜனாதிபதி இதற்கு எவ்விதப் பதிலும் தரவில்லை. இறுதியாக 2012ஆம் ஆண்டில் இருதரப்பும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளோம். ஆனால் இன்று இரண்டு வருடங்களின் பின்னரே அரசாங்கம் இப்போது எம்மை தெரிவுக் குழு பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கின்றது.

தெரிவுக் குழுவிற்கு செல்வதினால் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்காதென்பது எமக்குத் தெரியும். தெரிவுக்குழுவிற்கு நாம் சென்றால் 13 ஆவது திருத்தத்தையும் இல்லாதொழித்து இறுதியில் அடிமைக் கைதிகளாக தமிழர்கள் வாழும் நிலை ஏற்படுமென்பதே உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழித்து வட மாகாணத்தில் சிங்கள பேரினவாத சக்திகளை உருவாக்க நினைக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு நாம் ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். வடக்கு மக்களிற்கான அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொடுக்கும் வரையில் நாம் அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தைகளுக்கு செல்லமாட்டோம். இதனை அரசாங்கம் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் அடுத்த ஆண்டில் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாடு இடம்பெறவுள்ளது. இதன்போது அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படலாம்.

எனவே இவை அனைத்தையும் சமாளிக்கவே அரசாங்கம் எம்மை நாடுகின்றது. சர்வதேசத்திடமிருந்து தம்மை அரசாங்கம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமாயின் தமிழர்களுக்கான உரிமைகளை எவ்விதத் தடைகளும் இன்றி அனுபவிக்க அனுமதிக்க வேண்டும்.

வடக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும். வட மாகாணத்திற்கான பொலிஸ் காணி அதிகாரங்களை வழங்கி வடக்கில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும்.

சர்வதேசத்திடமிருந்து அரசாங்கத்தினை காப்பாற்றுவதற்காக தமிழ் மக்களை காவு கொடுக்க நாம் தயாராக இல்லை.

வடமாகாணத்திற்கான உரிமைகளை ஜனாதிபதி உறுதிப்படுத்தி இருதரப்புப் பேச்சுவார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்தால் மட்டுமே மற்ற விடயங்கள் தொடர்பில் சிந்திக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# தனியார் வங்கி ஒன்றில் பட்ட பகலில் கொள்ளை

தனியார் வங்கி ஒன்றிலிருந்து 14 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பணம் ஆயுத முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன் தினம் காலை 11.27 மணியளவில் மாலபே பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதம் தாங்கிய இருவரே பணத்தை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொள்ளையிட்ட இருவரும் முழுமையாக முகத்தை மறைக்கும் வகையிலான ஹெல்மட் அணிந்திருந்துள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

முகத்தை மறைத்த நிலையில் ஆயு தங்களுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தனியார் வங்கிக்குள் புகுந்து பாதுகாப்பு அதிகாரியை ஆயுதத்தை காண்பித்து முழங்கால் இடச்செய்துள்ளனர்.


பின்னர் உள்ளே புகுந்த மற்றையவர் மூன்று காசாளர் கூடத்திலிருந்த மூவருக்கும் ஆயுதத்தை காண்பித்து மூவரிடமிருந்த 14 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவை ஆயுத முனையில் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவரும் சினிமா பாணியில் பணத்தைச் சுருட்டிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து வங்கி முகாமையாளர் அத்துருகிரிய பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தமுறைப்பாட்டையடுத்து உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

வங்கி ஊழியர்களின் வாக்கு மூலங்களை பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளதுடன் சி. சி. ரி. வி. கமராக்களை வைத்து விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (அ-2)



பருத்தித்துறை மக்கள்வங்கி கிளையினரால் நடத்தப்பட்ட வனிதா வாசன 2013க்கான சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களில் ஒருவருக்கான பணப் பரிசிலை பருத்தித்துறை உதவி பிரதேச செயலர் திருமதி உஷாசுபலிங்கம் வழங்குவதையும் அருகில் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தம் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- பருத்தித்துறை செய்தியாளர்)

# உளநல தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உளநல நாள் நிகழ்வை முன்னிட்டு (ஒக்டோபர் 10) பாடசாலை மாணவர்களிடையே வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் கட்டுரை, சிறுகதை போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் மாகாண மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விபரங்களை மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். அதன் விபரம் வருமாறு,

**கட்டுரை–தரம்1–2**

எஸ்.லவனிகா (யா/மட்டுவில் தெற்கு அ.த.க.பா), எஸ்.சுதர்மதி (மு/ஆனந்தபுரம் மெ.மி.த. க.பா), ஆர்.பிறைமதி (மு/அனிஞ்சியன் குளம் மெ.மி.த.க.பா)

**தரம் 3–5**

பி.அபிசாகினி (யா/ சோதிவேம்படி வித்தி), எம்.காவியா (யா/சோதிவேம்படி வித்தி), ஏ.சௌமிகா (யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தி.)

**தரம் 6–9**

எஸ்.கேதீஸ்வரன் (வ/பூம்புகார் கண்ணகி வித்தி),பி.பிரமிலன் (வ/பூம்புகார்கண்ணகிவித்தி, எஸ்.தனுஜா (வ/ஒலுமடு அ.த.க.பா.)

**தரம் 10–13**

வி.கஜன்சிகா (யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி),கே.பவதாரணி (யா/வட்டு. இந்துக் கல்லூரி), ஐ.மயூரிகா (யா/வேலணை மத்திய கல்லூரி)

**குறுங்கதை–தரம் 6–9**

எஸ்.சியாமளா (யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தி), ஜே.கேதாரணி (மு/ பாலிநகர் ம.வி),பி.தர்சிகா (வ/ நொச்சிமோட்டை ஜே.எஸ்.வி)

**தரம் 10–13**

வி.கௌதமி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி),ஏ.அர்ச்சனா (யா/ கோண்டாவில் இந்து ம.வி.), எஸ்.துஷாந்தி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**படம் வரைதல்**

வை.எபர்சன் (மன்/முருங்கன் ம.வி), எஸ். சதீஸ்குமார் (யா/வட்டு மத்திய கல்லூரி),கே.ஜுட் துஷியந்தன் (மன்/சேவியர் ஆண்கள் கல்லூரி)

**கட்டுரை**

ரி.வாகினி (யா/மீசாலை கமலாம்பிகை வித்தி), திருமதி ஒ.வசந்தமாலினி (யா/ கொக்குவில் மேற்கு சி.சி.ரி.எம்.எஸ்),எஸ்.சசிகலா (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**குறுங்கதை**

திருமதி ஜே.சங்கமிதா (யா/ பிரான்பற்று கலைமகள் வித்தி), ஜே.எம்.ஆனந்தராஜா ( (யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்), என்.ஈ. சுபாஜினி (யா/மெலிஞ்சிமுனை றோ.க. த.க.பா.). (அ)

# ஜனாதிபதி இஸ்ரேலுக்கு விஜயம் செய்யவுள்ளார்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் ஜனாதிபதி தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நான்கு நாட்கள் கொண்ட விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலிய ஜனாதிபதி சிமோன பெரஸ் மற்றும் பலஸ்தீன தலைவர முஹமட் அப்பாஸ் ஆகியோரை ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

விவசாயம், சுற்றுலாத்துறை, வர்த்தகம் மற்றும் தொழில் வாய்ப்பு ஆகிய துறைகளில் குறித்த நாடுகளுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இஸ்ரேலிய ஆயுதங்களை இலங்கை அரசாங்கம் பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# சுண்டெலி எழுதிய சிறுகதை!



ஒரு கிராமத்தின் குடிசை ஒன்றின் பொந்தில் ஒரு சுண்டெலி வசித்து வந்தது.

அது பகல் முழுவதும் பொந்தில் அமர்ந்து புத்தகம் படித்துக்கொண்டிருக்கும். அதனிடம் சில புத்தகங்கள் இருந்தன. அக்கம்பக்கத்து எலிகளிடமிருந்து இரவல் வாங்கிய புத்தகங்கள் அவை. அந்தப் புத்தகங்களில் எலிகளால் எலிகளுக்காக எழுதப்பட்ட கதைகளும் கட்டுரைகளும் நிறைந்திருக்கும். அதிகமாகப் படித்ததால் தானும் கதை எழுதி ஒரு எழுத்தாளராக ஆக வேண்டும் என்று விரும்பியது கிராமத்துச் சுண்டெலி.

அது "எழுத்து வேந்தன்" என்று தனக்கு ஒரு புனை பெயரைச் சூட்டிக்கொண்டது. அப்படிப் புனை பெயர் வைத்துக்கொண்ட பிறகும் அதனால் எழுத முடியவில்லை. ஏனெனில், அதற்கு முக்கியமான எந்த அனுபவமும் ஏற்படவில்லை. எனவே எழுதுவதற்கு எந்த விஷயமும் இல்லை. அதன் கிராமத்து வாழ்க்கை அமைதியாகவும் நிம்மதியாகவும் சென்றுகொண்டிருந்தது.

கிராமத்துச் சுண்டெலி மாலை நேரமானதும் வெளியே உலாவப் போகும். வயல் வரப்பில் அமர்ந்து. மறையும் சூரியனின் அழகைப் பார்த்து ரசிக்கும். பயிர்களை அசைத்தபடி வரும் தென்றல் காற்றை அனுபவித்து ஒரு பாட்டுப் பாடும். பிறகு ஏதாவது கிழங்குகளையோ கனிகளையோ நிறையச் சாப்பிடும்.

அப்புறம் பொந்திற்குத் திரும்பி கதை எழுதும் முயற்சியில் ஈடுபடும். வெகுநேரம் அப்படிக் கண்விழித்துக் கற்பனைசெய்து பார்க்கும். ஆயினும் எழுதுவதற்கு ஏற்ற விஷயம் எதுவும் கிடைக்காமல் சோர்வுடன் படுத்துறங்கும்.

காலையில் ஒரு சிட்டுக் குருவி எலிப் பொந்தின் மேல் வந்து நிற்கும்: "சுண்டெலி நண்பனே, நீ உன் கதையை எழுதிவிட்டாயா?" என்று கேட்கும். சிட்டுக் குருவியின் கேள்விக்கு அமைதியாகப் பதில் சொல்லும் கிராமத்துச் சுண்டெலி: "இல்லை சிட்டே! இன்னும் நான் ஒரு கதைகூட எழுதவில்லை. ஆனால், எப்படியும் நான் ஒரு அருமையான கதையை எழுதியே தீருவேன். இது உறுதி.

அப்போது "யார் இந்த எழுத்து வேந்தன்?" என்று எலிகள் உலகமே என்னைத் தேடி வந்து பாராட்டும்".

சிட்டுக்குருவி, பக்கத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும் ஒரு புழுவையோ பூச்சியையோ பிடித்து விழுங்கிவிட்டுச் சொல்லும்: "உன் நம்பிக்கையை நான் பாராட்டுகிறேன்! உன் முயற்சியில் நீ வெற்றியடைய என் வாழ்த்துகள்!"

கிராமத்துச் சுண்டெலிக்கு ஒரு நண்பன் உண்டு. அதுவும் ஒரு சுண்டெலிதான். அது தொலைவிலுள்ள நகரத்தில் வாழ்ந்து வருகிறது. அந்த நகரம் பெரிய நகரம். அகலமான பெரிய சாலைகளும், எண்ணற்ற வாகனங்களும், பெரிய மாடிவடுகளும் உள்ள நகரம்.

ஒரு மாடி வீட்டில்தான் நகரத்துச் சுண்டெலி வசித்தது. மாடி வீட்டில் பொருட்கள் வைக்கும் அறை ஒன்று இருககிறது. அந்த அறைக் கூரையின் கீழ் உள்ள பரண்தான் நகரத்துச் சுண்டெலியின் வீடு.

ஒரே இடத்தில் வாழ்ந்து கொஞ்சம் சலித்துப்போய் விட்டது நகரத்துச் சுண்டெலி. எங்காவது வெளியூருக்குச் சென்று வந்தால் பரவாயில்லை என்று தோன்றியது. எனவே ஒருநாள் காலையில் தன் நண்பன் கிராமத்துச் சுண் டெலியைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டது. ஒரு நாள் முழுவதும் பயணத்திலேயே கழிந்தது. அது மாலை நேரத்தில் கிராமத்துச் சுண்டெலி இருக்கும் குடிசை வீட்டை அடைந்தது.

தன் நண்பனைப் பார்த்ததும் மகிழ்ச்சி கொண்டு துள்ளிக்குதித்தது கிராமத்துச் சுண்டெலி: "அடடே! வா நண்பனே வா! உன்னைப் பார்த்து எவ்வளவு நாட்களாகிவிட்டன. நலமாக இருக்கிறாயா?" என்று வரவேற்று தன் நண்பனைக் கட்டிப்பிடித்துக் கொண்டது.

கிராமத்துச் சுண்டெலி தன் விருந்தினனை அன்புடன் உபசரித்தது. நாற்காலியில் அமர வைத்து தேனீர் கொடுத்தது. தன் நண்பன் குளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. தன்னிடம் இருக்கும் பொருட்களைக் கொண்டு சுவையான உணவு தயாரிப்பதற்காக பரபரப்புடன் அங்கும் இங்கும் ஓடியது.

நாற்காலியில் கம்பீரமாக கால்மேல் கால் போட்டு அமர்ந்தது நகரத்துச் சுண்டெலி. தேனீரைச் சுவைத்தபடியே தலையசைத்து சுற்றிலும் நோட்டமிட்டது. அந்தப் பொந்தின் உட்புறம் அழுக்கும் தூசியும் நிறைந்திருந்தது. அங்கங்கே வெடிப்புகள் தெரிந்தன. ஒட்டடை படிந்திருந்தது. கிராமத்துச் சுண்டெலியின் புத்தகங்களும், எழுதிக் கிழித்துப்போட்ட காகிதங்களும் எங்கும் சிதறிக் கிடந்தன.

நகரத்துச் சுண்டெலி "டக்" என்று ஓசை வரும்படி தேனீர்க் குவளையைக் கீழே வைத்தது. அருவருப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டது: "ஓ, இதுதான் நீ வசிக்கும் பொந்தா? என்ன இவ்வளவு அசிங்கமாக இருக்கிறது!"

கிராமத்துச் சுண்டெலி, "ஆமாம். கிராமத்து வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். என்ன செய்வது!" என்று சொல்லிச் சமாளித்தது. அது கிழங்குகளையும், தேங்காய்த் துண்டுகளையும், பழங்களையும் தட்டுகளில் வைத்துக் கொண்டு வந்தது. தன் நண்பனின் முன்னால் வைத்துவிட்டுப் பணிவுடன் சொன்னது:

"நீ வயிறு நிறையச் சாப்பிட வேண்டும் நண்பனே. வேக வைத்த கிழங்கும், தேனில் நனைத்த தேங்காய்த் துண்டுகளும், உப்பும் மிளகும் தூவிய பழத்துண்டுகளும் இருக்கின்றன. நன்றாகச் சாப்பிடு!"

நகரத்துச் சுண்டெலி முகத்தைக் கோணலாக வைத்துக்கொண்டு இகழ்ச்சியாகக் கேட்டது: "நீ தினமும் இவற்றைத்தான் தின்று வாழ்கிறாயா?"

"ஆமாம். ஏன் இப்படிக் கேட்கிறாய்?"

"இவ்வளவு மோசமான, சுவையற்ற உணவுகளை எப்படிச் சாப்பிடுவது?"

"இவை மோசமானவை என்றும் சுவையற்றவை என்றும் யார் சொன்னது? கொஞ்சம் சாப்பிட்டுப் பாரேன்..."

நகரத்துச் சுண்டெலி ஒரு துண்டு கிழங்கை எடுத்துக் கடித்துப் பார்த்தது. "ச்சீச்சீ...த்தூ... தூ..."என்று துப்பியது. "என்ன இவ்வளவு பயங்கரமாகக் கசக்கிறது. இதைப்போய்த் தின்னச் சொல்கிறாயே!" என்று கடிந்துகொண்டது.

என்ன செய்வது என்று தெரியாமல் சோர்ந்த முகத்துடன் நின்றிருந்தது கிராமத்துச் சுண்டெலி. தன் விருந்தினனுக்கு என்ன சாப்பிடக் கொடுப்பதென்று அதற்குப் புரியவில்லை.


நகரத்துச் சுண்டெலி கேட்டது: "இங்கே பிரியாணி கிடைக்குமா?"

கிராமத்துச் சுண்டெலி திகைப்புடன், "பிரியாணியா? என்ன அது?"என்று கேட்டது.

"என்ன! உனக்குப் பிரியாணிகூடத் தெரியாதா? சரி, ஆம்லெட், பிரட் டோஸ்ட், கட்லெட், பிரைடு ரைஸ், நூடுல்ஸ்...இப்படி ஏதாவது தெரியுமா?"

கிராமத்துச் சுண்டெலி விழி பிதுங்கி நின்றது. நகரத்துச் சுண்டெலி சொன்ன எதையுமே அது கேள்விப்பட்டிருக்கவில்லை. இவ்வளவு முட்டாளாக இருக்கிறோமே என்று தன்னைத் தானே நொந்துகொண்டது....

(தொடரும்)




- 1065- லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் திறந்து வைக்கப்பட்டது.
- 1612- கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1836-தெற்கு அவுஸ்திரேலியா, அடிலெய்ட் ஆகியன அமைக்கப்பட்டன.
- 1836-மெக்சிக்கோவின் விடுதலையை ஸ்பெயின் அங்கீகரித்தது.
- 1846-அயோவா ஐக்கிய அமெரிக்காவின் 29 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1867-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவுக்கு உரிமை கோரியது.
- 1885-இந்தியாவின் வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள், ஊடகவியலாளர்கள் 72 பேர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பிப்பதற்கு பம்பாயில் கூடினர்.
- 1891-யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரம் ரூபாய்கள் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.
- 1895-பிரான்சின் லூமியேர சகோதரர்கள் பாரிஸ் நகரில் தங்கள திரைப்படங்களை முதன் முதலாகப் பொதுமக்கள் பார்வைக்குக் கட்டணத்துடன் திரையிட்டனர்.
- 1929-நியூசிலாந்தின் காலனித்துவ பொலிசார் ஆயுதமின்றிப் போராட்டத்தில் ஈடுபட்ட சமோவாவின் 11 பேரைச் சுட்டுக்கொன்றனர். இது சமோவாவின் விடுதலை இயக்கத்துக்கு தூண்டுதலாக அமைந்தது.
- 1930-மகாத்மா காந்தி பேச்சுவார்த்தைகளுக்காக பிரித்தானியா சென்றார்.
- 1958-கியூபாவின் சாண்டா கிளாரா நகர் மீது சேகுவேரா போர் தொடுத்தார்.
- 1981-அமெரிக்காவின் முதலாவது சோதனைக் குழாய் குழந்தை எலிசபெத் கார் வேர்ஜினியாவில் பிறந்தது.
- 2005-இரண்டாம் உலகப் போரில் இழைத்த குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜான்ஜுக் என்பவர் உக்ரேனுக்கு நாடுகடத்த ஐக்கிய அமெரிக்காவின் நீதிமன்றம் உத்தரவிட்டது.
- 2006-எதியோப்பிய மற்றும் சோமாலிய அரசுத் துருப்புக்களும் சோமாலியா தலைநகர் மொகடிசுவைக் கைப்பற்றியதை அடுத்து இஸ்லாமிய போராட்ட அமைப்பின் போராளிகள் தலைநகரைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2007-நேபாளத்தின் இடைக்கால நாடாளுமன்றம் நாட்டை குடியரசாக அறிவித்து மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

பிறப்புக்கள்

- 1940-அ.கு.ஆன்டனி, இந்திய அரசியல்வாதி
- 1944-கேர் முலிஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்
- 1945-பிரேந்திரா, நேபாள மன்னர் (இ.2001)
- 1947-நாஞ்சில் நாடன், எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிரிக்கெட் சாதனையாளர் எப்படி உருவாகிறார்...?



ஆன்மீகம் 77

குழந்தைகளாக இருந்தபோது வெறும் கொண்டாட்டத்திற்காக மட்டுமே விளையாடினோம். மெல்ல மெல்ல விளையாட்டும் பணம் சம்பாதிப்பதற்கான ஒரு வாய்ப்பாக மாறிவருகிறது.

உதாரணத்திற்கு கிரிக்கெட்டை எடுத்துக் கொள்ளுங்கள். வேலை செய்து சம்பாதிப்பதுபோல விளையாடியும் சம்பாதிக்க முடிகிறது. எனவே, விளையாட்டும் ஒருவேலை என்று ஆகிவிட்டது. இந்த நிலையில் கோப்பையை வெல்லும் ஆர்வம் அவர்களுக்குள் ஊடுருவும்போது, அவர்கள் விளையாட்டை மறந்துவிடுகிறார்கள். உண்மையில், விளையாடுவதே ஆனந்தம் என்று விளையாட்டு வீரர்கள் உணரும்போதுதான், அவர்களால் தங்கள் திறமையை திறம்பட வெளிப்படுத்த முடியும்.



நாட்டிற்காக விளையாடுவது என்பது பல கோடிப் பேர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது. அது அவ்வளவு எளிதல்ல. எதிர்பார்ப்புக்களை ஈடு செய்வதற்காக வீரர்கள் விளையாடத் துவங்கும்போது அவர்களது மனங்கள் அழுத்தத்திற்கு ஆளாகின்றன. அவர்களின் உடல் செயற்பாடும் ஒரு எல்லைக்குள்ளேயே இருக்கின்றது.

ஒரு மனிதன் உண்மையிலேயே மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் இருக்கும்போதுதான் உடல்சார்ந்த செயலை அபாரமாக நிகழத்த முடியும். விளையாட்டிற்கான யோகாவின் முக்கிய அம்சம் இதுதான். சரியான யோகப்பயிற்சி மூலம் தங்கள் உடல் மற்றும் மனம்மீது போதிய அளவு கட்டுப்பாட்டை அவர்களால் கொண்டு வர முடியுமேயானால் சிந்தனைகள் இல்லாமல் இயல்பாக விளையாட கற்றுக்கொள்ள முடியும்.

ஒருவர் முன்கூட்டியே சிந்திக்காமல் உடல்சார்ந்து செயற்படுகிறபோது அந்தக் கணத்திற்கேற்ப, சூழ்நிலையின் தேவைக்கேற்ப விளையாடுகிறபோது அது மிக நன்றாக அமைந்துவிடும். விளையாட்டின் தேவைக்கேற்ப செயல், பிரவாகம் எடுக்கும். இந்த வகையில் எதிரணியின் சவாலை அவர்களால் வலிமையோடு எதிர்கொள்ள முடியும்.

தியானம் என்றால், ஒருவர் தன்னுடைய இயல்புக்குத் திரும்புவது என்று பொருள். ஒருவர் தியானத்தில் இருக்கும்போது அவருடைய- தான் யார், தான் எப்படிப்பட்டவர் போன்ற- மற்ற அடையாளங்கள் கரைந்து போகின்றன. ஒரு சம்பியன் தியானம் செய்வது மிகவும் கடினம். தான் சம்பியன் என்ற அடையாளத்துடன் ஒருவர் தியானம் செய்வது மிகமிக கடினம். அதேபோல் ஒரு விளையாட்டு வீரரும் தன் அடையாளங்களை மனதில் வைத்து விளையாடும்போது இயல்பாக விளையாட முடியாது. அவர் தன் அத்தனை அடையாளங்களையும் உதிர்த்துவிட வேண்டும். ஒரு கிரிக்கெட் வீரர் தன் அடையாளங்களுக்கு ஏற்ப தன்னை கருத்திற்கொள்கிறபோது அவருக்கு அது ஒரு சுமையாகிவிடுகிறது. தன் அடையாளத்தை 100 சதவீதம் இழக்கிறபோது அவர் விளையாட வேண்டியதில்லை. விளையாட்டு தானாகவே நிகழ்கிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இந்தியாவுக்கு வழங்கப்பட்ட எண்ணெய் சேகரிப்புக் குதங்களை, மீளப்பெறும் முயற்சி

2002 இல் இந்திய எண்ணெய் வள நிறுவனத்தின் இலங்கையில் இயங்கும் லங்கா ஐ.ஓ.சியிடம் வழங்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் துறைமுக மாவட்டமான திருகோணமலையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் மிக்க 99 எண்ணெய்




சேகரிப்புக் குதங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இக்கட்சியின் மீது குற்றம் சுமத்தியுள்ள அதேவேளையில், இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்களை மீண்டும் இந்திய நிறுவனத்திடமிருந்து மீட்டெடுத்து அரச சொத்தாக மாற்றுதற்கான பேச்சு வார்த்தைகளில் தனது அரசாங்கம் ஈடுபடுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அமைந்துள்ள எமது எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை மீண்டும் அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கான பேச்சுக்களில் நாம் ஈடுபட்டுள்ளோம் என 2014 க்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது நிதி அமைச்சர் என்ற வகையில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவால் 2002 இல் இலங்கை அரசாங்கம் தலைமை தாங்கப்பட்டபோது திருகோணமலையில் உள்ள 99 எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் இந்திய நிறுவனத்திடம் குத்தகைக்கு வழங்கப்பட்டன.

திருகோணமலையிலுள்ள எண்ணெய் சேகரிப்புக் குதங்கள் 35 ஆண்டுகால குத்தகையுடன் ஆண்டுதோறும் 100,000 அமெரிக்க டொலர்கள் குத்தகைக் கட்டணத்துடன் அரசின் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இந்தியாவின் லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டு, 2002 இல் குத்தகைக்கு வழங்கப்பட்டது.

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தால் பயன்படுத்தப்படாத குதங்களை மீளப்பெற்றுக்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக கடந்த மார்ச்சில் இலங்கை அறிவித்திருந்தது.

கடந்த மார்ச்சில் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியாவானது வாக்களித்த கையோடு இந்த அறிவிப்பை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்தது.

"இந்திய நிறுவனமானது இந்த எண்ணெய் சேகரிப்புக் குதங்களைப் பயன்படுத்தாவிட்டால் நாங்கள் அவற்றைப் பயன்படுத்த முடியும்" என கடந்த மார்ச்சில் இலங்கை அரசாங்கப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கெஹலிய றம்புக்வெல அறிவித்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்திற்கும் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததற்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என கெஹலிய றம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த நவம்பரில் இலங்கையில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு இடம்பெற்றபோது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இதனைப் புறக்கணித்ததைத் தொடர்ந்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுநிலையில் மேலும் விரிசல் ஏற்பட்டுள்ளது.

-புதினப்பலகை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத்தவறின் பொருளாதாரத் தடை விதிக்கப்படலாம்

## சிரேஷ்ட அமைச்சர் விதாரண எச்சரிக்கை

**ஜெனீவாவில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் இலங்கையின் மனிதவுரிமைகள் விவகாரம் குறித்து ஆராயப்படவிருக்கின்ற நிலையில் அதற்கு முன்பதாக நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.**

தவறும் பட்சத்தில் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகளின் பொருளாதார தடையை எதிர்கொண்டேயாக வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். கட்சியின் 78 ஆவது வருடாந்த கூட்டம் ருவான்வெல்ல என்.என். பெரேரா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் கூறுகையில்,

அடுத்த வருடத்தில் இடம்பெறவிருக்கின்ற சர்வதேச மனிதவுரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்பதாக அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறை ப்படுத்துமேயானால் பேரவையின உறுப்பு நாடுகளது ஆதரவு எமக்கு கிடைக்கும் என்பதில் ஐயப்படத்தேவையில்லை.

ஏனெனில், இக்கூட்டத்தொடரில இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளதுடன் கேள்விகளும் எழுப்பப்படவுள்ளன.

இதற்கு நாம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஆகவே, இதற்கு முன்பதாக அரசாங்கம் இதனை செய்ய வேண்டும். ஏனெனில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தவறும் பட்சத்தில் எமது நாட்டின் மீதான மேற்குலக நாடுகளின் பொருளாதார தடையை தவிர்க்க முடியாதிருக்கும்.

இலங்கையின் மனித உரிமைகள் குறித்து பேசுகின்ற பிரித்தானியா 1940 காலப்பகுதிகளில் பாரிய மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டிருக்கிறது. ஆகவே, பிரித்தானியா தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு மேற்குலக நாடுகள் முன்வருமா என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

இப்படி இருக்கும் போது எமது நாட்டின் மனிதவுரிமை குறித்து பிரித்தானியா கேள்வி எழுப்புவது எந்த விதத்தில் நியாயமானது என் தெரியாதுள்ளது.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் இணைந்து ஈராக்கில் மேற்கொண்ட மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் எந்தவொரு சர்வதேச நாடும் கேள்வியெழுப்புவதாகவில்லை. இதனால் அவை சிறிய நாடுகள் மீது ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அமெரிக்காவின் தாளத்திற்கு ஏற்ற வகையில் ஐக்கிய தேசிய கட்சி செயற்பட்டு வருகின்றது. இந்நா ட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்திவிட வேண்டுமென்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். இருப்பினும் இடதுசாரிகளாகிய நாம் அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றார். (அ-2)

## இலவச ஆங்கில மொழிப் பயிற்சி

க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இரண்டு நாட்கள் கொண்ட (8 மணித்தியாலங்கள்) இலவச ஆங்கில மொழிப்பயிற்சிப் பட்டறையொன்று எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மீசாலை உயர் கலைக்கல்லூரியில் நடைபெறும்

எனவே, பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்கள் அனைவரையும் இப்பயிற்சிப்பட்டறையில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-2)

# இந்து ஆலய நிர்வாகங்கள் தொடர்பில் முறைப்பாடுகள்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகங்கள் தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களில் தெரிவு செய்யப்பட்ட 61 ஆலயங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி உதவி வழங்கும் நிகழ்வு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், யாழிலுள்ள இந்து ஆலயங்களின் நிர் வாகங்களுக்கிடையில் தற்போது பாரிய முரண்பாடுகள் தோன்றியிருக்கின்றன. இத்த கைய முரண்பாடுகள் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

அத்தோடு இதேபோன்றதான முரண்பாடுகளால் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்ற நிலைமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு இந்து ஆலய நிர்வாகங்களுக்கிடையில் ஏற்பட்டு வருன்ற இத்தகைய முரண்பாடுகள் மிகவும் மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றன.

இங்கு எந்தவொரு நிர்வாகங்களுக்கிடையிலும் முரண்பாடுகள் ஏற்படுவது நியதியாக இருந்தாலும் அத்தகைய முரண்பாடுகள் அனைத்தும் நிர்வாகங்களுக்கிடையிலேயே பேசித் தீர்க்கப்பட வேண்டும். இதனை விடுத்து வெளியே முரண்பாடுகள் வருகின்றமையினால் மேலும் முரண்பாடுகளே தோற்றுவிக்கப்படுகின்றன.

இவ்வாறு முரண்பாடுகள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் அவற்றைப் பேசித் தீர்ப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும். ஆலயங்களுக்கென்று தனித்துவமான சிறப்புக்களும் புனிதத் தன்மையும் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாத்து பேணுகின்ற வகையிலேயே செயற்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பும் எம்மிடத்தே உள்ளது.

ஆலயங்களின் புனிதம் சிறப்பியல்புகள் பாதுகாக்கப்பட வேண்டிய அதேவேளையில் அதனைப் பேணுகின்ற கலாசார பண்புடைய சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் ஆலயத்திற்குள் ஏற்படுகின்ற முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் மேலும் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் நிலைஏற்படலாம். எனவே, ஆலயங்களில் இருக்கின்ற முரண்பாடுகள், பிணக்குகள் களையப்பட் வேண்டும். அவற்றைப் பேசித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இங்குள்ள ஆலயங்களின் நிர்வாகங்கள் மக்களுடைய கருத்துக்களை உள்ளடக்கி நீதியான முறையில் செயற்பட்டால் நிர்வாகங்களுக்கிடையில் எந்தவித பிணக்குகளும் ஏற்படாது. ஆகவே, நிர்வாகங்கள் மீது நம்பிக்கை வைக்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பௌத்த துறவிக்கு எதிராக 172 முறைப்பாடுகள் பதிவு

மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் பௌத்த துறவி ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அநுராதபுரம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் பௌத்த யாத்திரிகர்களை தம்பதிவிற்கு யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி 50 இலட்சம் ரூபாவிற்கு மேல் மோசடி செய்த முன்னாள் பௌத்த மதகுரு ஒருவரை எதிர்வரும் ஜனவரி மாதம் 6ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் இராணுவ வீரரும், பிரபுக்கள் பாதுகாப்பு அதிகாரியாகவும் கடமை புரிந்து பின்னர் பௌத்த துறவியாக மாறி அதனையும் கைவிட்ட மேற்படி சந்தேக நபருக்கு எதிராக 172 முறைப்பாடுகள் அநுராதபுரம் பொலிஸில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சூரியவெள பகுதியில் தலைமறைவாகி இருந்த போது அநுராதபுரம் பொலிஸார் மேற்படி சந்தேக நபரையும் சாரதியையும் கைதுசெய்து அநுராதபுரம் நீதவான் முன்னி லையில் ஆஜர் செய்த போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் கந்தசாமி ஜெயரட்ணம்



வீரபத்திரர் கோவிலடி, உடுப்பிட்டியை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டகந்தசாமி ஜெயரட்ணம் அவர்கள் 23.12.2013 திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னார் நவமலர் அவர்களின் அன்புக் கணவரும், வசீகரன் (கனடா), உமாசுதா (அவுஸ்திரேலியா), கிரிஷாந்தி (லண்டன்), கோவர்த்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் குணரட்ணம் (கனடா), அரசரட்ணம் (கனடா), பாலகிருஷ்ணன் (பிரான்ஸ்), குலேந்திரன் (கனடா), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அருந்தவராஜா, பூமலர், நாகேஸ்வரி, சோதிமலர், ராணிமலர், நடராசா, ஆனந்தராசா காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, வியாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தவயோகேஸ்வரி (கனடா), ஸ்ராலின் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் வர்ஷிகா (கனடா), அஸ்வின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29.12.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கரும்பாலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்**

**அன்னாரின் குடும்பத்தினர்**

**வீரபத்திரர் கோவிலடி,**
**உடுப்பிட்டிதெற்கு,**
**உடுப்பிட்டி.**

**தொ.பே.இல.:- 0212055883,**
**077 9077055**

(சி/5927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் பிறப்பு அன்று மாடடைக்குடிலில் இன்று ஏழைகளின் இல்லங்களிலும் உள்ளங்களிலுமே!



இறைதந்தையின் திட்டத்தினாலும், இறைவாக்கினரின் முன்னறிவிப்பினாலும் மெசியா பற்றிய ஆழமான நம்பிக்கை இஸ்ராயேல் மக்கள் மத்தியில் வலுவாகப் பேசப்பட்டது.

காலத்துக்கு காலம் பல்வேறு நாடுகளின் அடிமைத்தனங்களாலும், துன்புறுத்தல்களாலும் தங்களையே இழந்து, மாற்றானின் வழிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள், இறைவன் தங்களை மீட்டு விடுதலை வாழ்வை மீண்டும் தருவார் என்ற நம்பிக்கையை கைவிடவில்லை. மெசியா பற்றிய அவர்களது எதிர்பார்ப்பு வேறு கோணத்தில் இருக்க மெசியாவாகிய இயேசுவின் பிறப்பு வேறுகோணத்தில் அமைந்தது.

இந்த உலகத்தில் தனது பெற்றோரை தேர்ந்தெடுக்கும் உரிமை எந்தவொரு மனிதனுக்கும் இல்லை. ஆனால் கடவுள் தன் மகனுக்கான மண்ணகப்பெற்றோரை தேர்ந்தெடுக்கிறார். அக்காலத்தில் அதிகார வர்க்கத்தினரும், சமூகத்தில் அந்தஸ்து மிக்க பெரியவர்களும் இருந்த போதிலும், இறைவன் ஏழைப் பெற்றோர்களையே தெரிந்தெடுக்கிறார்.

மெசியாவை அரசனாகவும், பெரிய வீரனாகவும் எதிர்பார்த்த இஸ்ராயேல் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆனால் இறைச்சட்டத்திற்கும், இறைவாக்கினரின் முன்னறிவிப்புக்கும் உட்பட்டதாக தாவீதின் ஊராகிய பெத்லகேமில் இயேசு பிறந்தார்.

இந்த மாபெரும் உலகத்தை உருவாக்கிய ஆண்டவருக்கு உலகில் பிறக்க இடமில்லை என்றால் மனிதரின் கொடூரம்தான் எம்மாத்திரம். மாளிகையில் பிறக்க வேண்டிய இறைமைந்தன் மாடடைக் குடிலில் பிறந்தார் என்றால் அவரது தாழ்மையும் ஏழ்மையும் மனிதர்களால் எண்ணிப்பார்க்க முடியாதவை. "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக் 2:11).

ஏழை வடிவில் ஏழைகளுக்காக பிறந்த இறைமகனின் பிறப்புச் செய்தி முதலில் ஏழைகளுக்கே அறிவிக்கப் பட்டது.



கடவுளை ஏழையாகப் பிறந்தவர் என ஏற்றுக் கொள்ளவேண்டும். செல்வராக இருந்த அவர் ஏழைகளாகிய நாம் செல்வராகும்படி நமக்காக ஏழையானார் (2கொரி 8:9). ஆனால் உலகம் அவரின் ஏழ்மையை உணர்ந்ததா? அவரது பிறபபின் அர்த்தத்தைதானும் அறிந்ததா? ஏன் இறைவன் மனிதனானார் என புரிந்தது கொண்டதா?... உலகம் இயேசுவின் போதனையை ஒதுக்கியது. தன்னுடைய மாயை நாடகத்தை ஆரம்பித்தது. அவரது போதனைகளை தூக்கி எறிந்தது. பேதமையால் அழிவை நோக்கி நகர்ந்தது. விளைவு...?

இன்றைய சமுதாயத்தை ஆழமாக ஊடுருவி நோக்கும்போது ஒரு மாபெரும் உண்மையை நாம் உணரமுடியும். யாதெனில் ஒரு புறம் மக்கள் வாழ்வுக்காக ஏங்குகின்றனர் வாழ்வை முழுமையாகப் பெறுவதற்காகப் போராடுகின்றனர். மறுபுறம் மனிதர் அழிவை நோக்கிப் பயணமாகின்றனர். வாழ்வுக்கும் சாவுக்கும், ஆக்கத்திற்கும் அழிவுக்கும், எழிச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடையே மனித சமுதாயம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. உலகத் தொடக்கத்திலே மனிதனோடு கூடிப்பிறந்த வன்முறை மனித வரலாற்றில் தொடர்ந்து அவனைக் காயப்படுத்தி செல்வது வரலாறு தரும் பாடம் மட்டுமல்ல இன்றைய யதார்த்த உலகிலும் நாம் அனுபவிப்பது வெளிப்படையுண்மை.

மனித மாண்பை சிதைத்து, மனித உரிமையை நசுக்கும் எல்லா செயற்பாடுகளும் வன்முறையின் வெளிப்பாடுகளே. அகதி வாழ்வு, காரணமின்றிய சிறைவைப்பு, உரிமைகள் மறுக்கப்படல், பாலியல் துஷ்பிரயோகம், சீதனக் கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், முதியோர் புறக்கணிப்பு, வறுமை, வேலையில்லாமை, சமூக சீர்கேடுகள், கலாசார அழிவுகள், ஆன்மீக வரட்சி என்பன்தான் வன்முறை மனிதனுக்கு அளித்த வெகுமதிகள்.

இன்றைய உலகில் துன்புறும் ஏழைகளுக்கு ஆறுதல் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவே. "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் ஏனெனில் இறையாட்சி உங்களுக்குரியதே" (லூக் 6:20). இந்த உலகத்திலே எங் களை ஏற்றுக் கொள்ள யாருமில்லையே, எங்கள் உணர்வுகளை புரிந்து கொள்வார் ஒருவர்கூட இல்லையே என்று மனவிரக்தியோடும், வேதனையோடும் எல்லாவற்றையும் இழந்து வறுமையில் வெறுமையோடு வாழும் எமமக்களுக்கு ஆறுதல் தருவது இயேசுவின் ஏழைக் கோலம் தானே. இன்று வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு, அன்றாட உணவுக்காக, வேலைவாய்ப்புக்காக அலைந்து திரியும் மனத உள்ளங்களுக்கு இயேசுவின் பிறப்புச் செய்தி ஒரு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும் என்றால் மிகையாகாது.

இந்த ஏழைகளை தன்னுள் உள்வாங்க, தன் அன்பை அவர்களுக்கு கொடுத்து அவர்களை ஆறுதல்படுத்த அவர் மீண்டும் பிறப்பது துன்புறும் எம்மக்களின் தற்கால இல்லக்குடிசைகளிலும் உள்ளக்குடிசைகளிலுமே.

கிறிஸ்து பிறப்பு விழா கடவுளின் பேரன்பை எமக்கு வெளிப்படுத்தும் ஒரு மகத்தான பெருவிழா. கிறிஸ்துவின் பிறப்பு எமக்கு அருளும் கொடைகள் அன்பு, மகிழ்ச்சி, அமைதி என்பனவாகும்.

இக்கொடைகள் நிலையாக எம்மில் தங்க வேண்டுமாயின் நாம் கடவுளின் திருவுளத்திற்கு கீழ்ப்படிவுள்ளவர்களாக மாற வேண்டும்.

ஏழைகளை வாழ வைக்க வேண்டும் அவர்களை அன்பு செய்ய வேண்டும். ஏழை களில் இயேசுவை கண்டு மகிழும் நிலையை, துன்புறும் எம்சகோதரரின் முகத்தில் இயேசுவின் பிரசன்னத்தை கண்டு உறவு கொள்ளும் உன்னத நிலையை எங்களில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இயேசு துன்புறும் எங்கள் உள்ளக் குடிசையில் வந்து பிறக்க எங்களை தயார் செய்து அமைதியின் தேவனை எங்களில் ஏற்று உலகில் அமைதியை காண புறப்படுவோம்.

**அருட்தந்தை றமேஸ்**
**அ.ம.தி**

# பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நெருக்கமான உறவு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகளை நல்லமுறையில் கட்டியெழுப்பி, அதன் மூலமான புரிந்துணர்வை வளர்ப்பதன் ஊடாக யாழ்.மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி எமது மக்களின் நிம்மதியானதும் மகிழ்ச்சிகரமானதுமான வாழ்க்கையை உறுதிப்படுத்த முடியுமென பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட பொது மக்கள் பாதுகாப்புக்குழு தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாலை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு சமுதாயத்திலும் தவறுகள் நடைபெறாமல் இல்லை. தவறுகளைத் திருத்திக் கொண்டு முடியுமானவரை முன்னேறிச்செல்ல வேண்டும்.

பிரதிப் பொலிஸ்மா அதிபராக புதிதாக நியமனம் பெற்றிருப்பவர் நியாயமான முறையில் பிரச்சினைகளை அணுகுபவராக இருக்கிறார்.

தம் தரப்பு தவறுகளை ஏற்றுக் கொண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கு அவர் முயற்சிப்பது தெரிய வருகிறது.

பொலிஸாருக்கும் நல்ல எண்ணங்கள் இருக்கின்ற போது அதனை வளர்க்க நாம் பக்கபலமாக இருக்க வேண்டும்.

ஈ.பி.டி.பி.கட்சி உறுப்பினர்களோ அல்லது ஈ.பி.டி.பி. பெயரைப் பயன்படுத்தி வேறு எவரேனுமோ சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாரிடம் கேட்டுக் கொள்கின்றேன். இதில் எனது தலையீடுகள் எதுவு மிருக்காது.

இது வரையில் அப்படியேதும் தலையீடுகள் இருந்ததுமில்லை. அதேநேரம் மேற்படி சம்பவங்கள் ஏதும் இடம்பெற்றால் இங்கிருக்கும் பிரதேச செயலாளர்கள், அதே போல் பொது மக்கள், ஊடகவியலாளர்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது இம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள விழிப்புக் குழுக்கள் பலம் குன்றியனவாகவேயுள்ளன. மாவட்ட ரீதியாகவும் பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவும் அமைக்கப்பட்டுள்ள விழிப்புக் குழுக்களை மீளப் புனரமைப்புச் செய்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது குறிப்பாக புதிய பொலிஸ் காவலரண்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களை அமைப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

வேலணை, காரைநகர், மருதங்கேணி போன்ற பகுதிகளில் புதிய பொலிஸ் நிலையங்களை அமைப்பது தொடர்பிலும் பொன்னாலை, மாதகல், மணியந்தோட்டம், பாரதி வீதி போன்ற இடங்களில் புதிய காவலரண்கள் அமைப்பது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இந்துக் கல்லூரி மாணவன் கொலை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன், குற்றவாளியை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதன் போது பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணும் முகமாக தங்களால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# மன்னார் மனித புதைகுழி இன்று தோண்டப்படுகிறது

(மன்னார்)

மன்னார் திருக்கேதிஸ்வரம் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மனித புதைகுழி இன்று சனிக்கிழமை மீண்டும் தோண்டப்படவுள்ளது. மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மற்றும் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் வைத்திய ரெட்ண ஆகியோர் முன்னிலையில் குறித்த மனித புதைகுழி தோண்டப்படவுள்ளது .

மன்னார் நீதவானின் உத்தரவிற்கமைவாக இன்றைய தினம் காலை 7.30 மணிமுதல் குறித்த மனிதப்புதைகுழி தோண்டப்படவுள்ளது .

இதன் போது மனித புதைகுழி காணப்படுகின்ற பகுதியைச் சுற்றியுள்ள வீதிகள் உடைக்கப்பட்டும் காடுகள் வெட்டப்பட்டும் மனித புதைகுழி தோண்டப்பட்டு மனித எச்சங்கள் மீட்கப்படவுள்ளது .

கடந்த 20 ஆம் திகதி மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை சந்தியில் இருந்து [illegible] நீர் இணைப்பிற்காக குழியொன்று தோண்டிய [illegible] மண்டையோடுகளும் , மனித எலும்புகளும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தேசியவாசிப்புமாத பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஏற்பாட்டில், தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வும் உள்ளூராட்சி வார நிறைவு விழாவும் எதிர் வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேசசபையின் தலைமைச் செயலகத்தில் குறித்த பிரதேசசபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன்சைன் ஜக்சீல், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலகக் கணக்காளர் செ.ரகுநாதன், ஓய்வு நிலை யாழ். பல்கலைக்கழக நூலகப் பதிவாளர் மு.சின்னராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வேலணை மின் அத்தியட்சகர் ஜேக்க்ப் செபஸ்தியன் பிள்ளை, யாழ். பிராந்திய உள்ளூராட்சி பிராந்திய உதவி ஆணையாளர் து.இளமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது தேசிய வாசிப்பு மாத போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு, சேகரிக்கப்பட்ட நூல்கள் வழங்கல், போட்டிகளில் வெற்றியீட்டி யோருக்கான பரிசளிப்பு, மாணவர்களின் கலை நிகழ்வுகள், விசேட பட்டிமன்றம் என்பன இடம்பெறும். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் விடுதலையை நேசித்த புரட்சித் தலைவர்!

மறைந்த புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்களுக்கும்விடுதலைப் புலிகளின் இயக்கத தலைவர் பிரபாகரன் அவர்களுக்கும் இடையே நிலவிய உறவு ஈடு இணையற்ற காவிய நட்புறவாகும்.

ஆரம்ப காலத்தில் எல்லா ஈழ விடுதலை இயக்கங்களையும்நேசித்த புரட்சித் தலைவர் காலப்போக்கில் பிரபாகரனின், அவரது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரம், தியாகம், வல்லமையை உணர்ந்து பிரபாகரனுக்கு மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் எவ்வளவோ உதவிகள் புரிந்தார்.



எம்.ஜி.ஆருடன் இணைந்து நின்றும், கருத்துபேறுபாடு கொண்டு விலகிநின்றும் அரசியல் நடத்தியிருக்கிறேன்; அவரால் பாராட்டப் பட்டும் இருக்கிறேன். அவர் ஆட்சியில் அடக்கமுறைக்கும் ஆளாகி சிறைப்பட்டுமிருக்கிறேன். ஆனால், பிரபாகரனுக்கு தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏம்ஜிஆர் புரிந்த அளப்பெரிய உதவிகளை நினைத்தால் என் நெஞ்சம் அம் மாமனிதரைுக்காக கசிந்திருகுகின்றது. கால வெள்ளத்தில் கரையாத அந்த நிகழ்ச்சிகள் இன்னமும் பசுமையாக என்னுள்ளத்தில் படிந்துள்ளன.

1982 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி சென்னை பாண்டி பஜாரில் பிரபாகரனும், முகுந்தனும் மோதிக்கொள்ள நேர்ந்தது. இம்மோதலின் விளைவாக காவல் துறை இருவரையும் மற்றும் சில தோழர்களையும் கைது செய்தது.

பிரபாகரனும் அவரது தோழர்களும் தங்குவதற்காக இடங்கொடுத்ததற்காக சென்னை மைலாப்பூரில் நான் குடியிருந்த் வீட்டைக் காவல் துறை சோதனையிட்டது. செய்தியறிந்த நான் மதுரையிலிருந்து செனனை விரைந்து வந்தேன். வந்தவுடன் நான் கேள்விப்பட்ட செய்தி என்னை அதிர்ச்சி அடைய வைத்தது. பிரபாகரன், மற்றும் கைதுசெய்யப்பட்ட போராளிகளை தங்களிடம் ஒப்படைக்கவேண்டும் எனக் கேட்டு சிங்களக் காவல்துறை அதிகாரிகள் பறந்து வந்திருந்திருக்கும் செய்தியே அதுவாகும். உடனடியாக செயற்பட்டேன். யூன் மாதம் முதல் நாள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றைக் கூட்டினேன். 20 கட்சித் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். அ.தி.மு.க.வின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ப.உ.சண்முகம் அக்கூட்டத்தில் கலந்துகொண்டார். முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஆனுமதியோடு அவர், அக்கூட்டத்திற்கு வந்தாா.

பிரபாகரன் உட்பட கைதான போராளினகவை விடுவிக்கக வேண்டும் என்றும், எக்காரணம் கொண்டும் அவர்களைச் சிங்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கக் கூடாது என்றும் வற்புறுத்தும் தீர்மானம் அக்கூட்டத்தில் ஒருமனதாகநிறைவேற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள 20 கட்சிகள் ஒன்றுபட்டு நிறைவேற்றிய இத்தீர்மானம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திற்று அதைக் காரணம் காட்டி எம்.ஜி.ஆர். இந்திய அரசுக்கு எழுதிய கடிதம் அன்று பிரபாகரன் உட்படபல போராளிகளைக் காப்பாற்றியது. இதுதொடர்பாகஎம்.ஜி.ஆர். அவர்களை நான் சந்தித்தபோது, எக்காரணம் கொண்டும் போராளிகள் எவரையும் நாடு கடத்த நான் சம்மதிக்க மாட்டேன் என அவர் உறுதி கூறினார். அதன்படி இறுதிவரை நடந்தார். தமிழீழ விடுதலப்புலிகளின் பிரபாகரன், அன்று நாடுகடத்தப் பட்டிருந்தால் ஒரு வீரனின் வீரவரலாறு சிறையில் முடிந்திருக்கும்.

சென்னை வழக்கில் பிணையில் விடுதலையான பிரபாகரன் மதுரையில் எனது இல்லத்தில் பல மாதங்கள் தங்கியிருந்தார். அவருக்கு காவலுக்காக சில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். வழக்கு வழக்குத் தவணைக்காக அவர் அடிக்கடி சென்னை வரவேண்டியிருந்தது. அப்பொழுது காவல்துறை அதிகாரிகள் உடன் வருவார்கள். தாயகத்திற்கு திரும்பிச் சென்று போராட்ட நடவடிக்கைகளைத் தொடர பிரபாகரன் முடிவு செய்தார்.

அதை என்னிடம் கூறினார். பிறகு ஒருநாள் காவல்துறையின் கட்டுக் காவலை மீறி மாயமாக மறைந்தார். பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகள் வெளியிட்டன. காவல்துறை உயர் அதிகாரிகள் என்னை விசாரித்தபோது, நான் பிரபாகரன் யாழ்ப்பாணம் போய் விட்டார் என்றேன். ஆனால், அதை நம்பத் தயாராக இல்லைஅவர்கள். பெங்களூரிலோ, பாண்டிச்சேரியிலோ மறைந்திருப்பதாக கருதினார் கள். தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டார்கள். பலன் எதுவுமில்லை. அவர்களது கோபம் என் மீது திரும்பியது. என் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணித்தனர். இதற்கிடையில் சட்டமன்ற வளாகத்தில் ஒரு நாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது.புன்முறுவலுடன் என்னை அழைத்துக்கொண்டு அவர் அறைக்குச் சென்றார்.

என்ன உங்கள் நண்பரை பத்திரமாக அனுப்பிவிட்டீர்கள் போல இருக்கிறது என்று கூறிவிட்டு அவருக்கே உரித்தான மோகனப் புன்சிரிப்பை சிந்தினாா. அவருடைய சிரிப்பின் அர்த்தங்களைப் புரிந்துகொண்டேன். பிரபாகரன் தப்பிச்செல்ல உதவியதாக என்மீதோ, தமிழகத்தில் எஞ்சியிருந்த விடுதலைப்புலிகள் மீதோ காவல்துறை எத்தகைய நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த மர்மத்தை அவருடைய சிரிப்பு அம்பலப்படுத்திற்று. 1984 ஆம் ஆண்டு பிரபாகரன் மீண்டும் தமிழகம் திரும்பினாார். தனது அமைப்பிற்கான தளங்களையும் பயிற்சிமுகாம்களையும் நிறுவி த.வி.புலிகள் இயக்கத்தை மேலும் சிறப்பாக வளர்த்தெடுத்தார்.

தமிழகமெங்கும் விடுதலைப் புலிகளின் கண்காட்சிகள் தங்கு தடையின்றி நடாத்தப்பட்டன. பகிரங்கமாக நிதி திரட்டப்பட்டது. அவ்வளவையும் முதல்வர் எம்.ஜி.ஆர் அனுமதித்தார். ஆனால், ரோஉளவு அமைப்பு முட்டுக்கட்டை போட்டது. பல வகையான நிர்ப்பந்தங்களை அது ஏற்படுத்தியது.

இதற்கிடையில்1986ஆம்ஆண்டு நவம்பர் 16 ஆம் நாள் பெங்களூரில் சார்க் மாநாடு நடபெறவிருந்தது. இம்மாநாட்டில் கலந்து கொள்ள வரம் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் எனக் காரணம் காட்டித் தமிழகத்திலிருந்த போராளிகள் அனைவரையும் கைது செய்யும் படியும். அவர்கள் வசமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றும் படியும் மத்திய அரசு ஆணையிட்டது. அதன்படி போராளிகள் பலர் கைது செய்யப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. பிரபாகரனை கைது செய்யாமல் வீட்டுக்காவலில் வைக்கும்படி முதல்வர் எம்.ஜி.ஆர் உத்தர விட்டார். அத்தோடு பெங்களூர் சார்க் மாநாட்டின் பொழுது ஜெயவாத்தனாவையும் பிரபாகரனையும் சந்திக்க வைத்து ஒரு சமரசம் ஏற்படுத்த பிரதமர் ராஜீவ்காந்தி ஒரு திட்டமிட்டார்.


அவரது சமரச திட்டத்தின் சாராம்சம் வருமாறு,

1.விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அங்கீகாரம்

2. வடக்கு மாகாணம் மட்டும் தமிழ் மாநிலமாக ஏற்கப்படும்.

3. பிரபாகரன் முதலமைச்சராக நியமிக்கப்படுவார்.

இந்தியாவின் மாநில முதலமைச்சர் பதவி என்பது கிடைக்கக் கூடாத அரிய பதவி. இப்பதவியை அடைய பலர்துடிக்கின்றனர். அதற்காக யார் காலிலும் விழவும் அவர்கள்தயார். இத்தகைய இழிபிறவிகளையே சந்தித்துப் பழக்கப்பட்டவர் ராஜீவ். அவர் விட்டெறியும் முதலமைச்சர் பதவி என்னும் எலும்பத் துண்டை பாய்ந்தோடி, கௌவுபவர்களையே பார்த்துப் பழக்கப்பட்டவர் ராஜீவ். எனவே முதலமைச்சர் பதவி ஆசையைக் காட்டி பிரபாகரனை தம் வலையில் வீழத்த அவர், முயற்சித்தார். நவம்பர் 16 ஆம் நாள், பிரபாகரன் பெங்களூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



பிரபாகரன் எதற்கும் மசியவில்லை. ஜெயவர்த்தனாவை சந்திக்கக் கூட அவர் மறுத்துவிட்டார். இறுதியாக பிரதமர் ராஜீவ், முதலமைச்சர் எம்.ஜி.ஆரை அழைத்து பிரபாகரனிடம் பேசும்படி கூறினார். எம்.ஜி.

> கடந்த 24.12.2013
> எம்.ஜி.ஆரின் நினைவுதினம்-
> தமிழர் தேசிய இயக்கத்
> தலைவர் நெடுமாறன்,
> கடந்தகால அறிக்கைகளில்
> எம்.ஜி.ஆர். நினைவாக
> தெரிவித்தவற்றிலிருந்து...

ஆரும் பிரபாகரனும் சந்தித்தார்கள். தனது திட்டத்தை ஏற்றுக் கொண்டு ஆறுமாத காலம் செயற்பட்டால் பின்பு அனைத்து உதவிகளையும் செய்வதாக பிரதமர் கூறுகின்றார். என எம்.ஜி.ஆர் கூறிய பொழுது பிரபாகரன் கூறிய பதில், எம்.ஜி.ஆரைத் திகைக்க வைத்தது.

கேவலம்! மாகாண முதலமைச்சர் பதவிக்காக நாங்கள் ஆயுதம் தூக்கவில்லை. என் அருமைத் தோழர்கள் பலர் எங்கள் மண்ணின் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்து விட்டார்கள். அவர்களுக்கு கிடைத்த இன்னமும் எனக்குக் கிடைக்கவில்லை. நாளை நானும் மடிய நேரிடலாம். மரணத்தோடு போராடும் வேளையில் முதலமைச்சர் பதவிக்காக இலட்சியத்தைக் காட்டிக் கொடுத்தவன் என்ற வழிக்கு நான் ஆளாக விரும்பவில்லை. எங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு உதவ பிரதமர் ராஜீவ் விரும்பினால் உதவட்டும். நன்றியோடு ஏற்போம், உதவாவிட்டால் பரவாயில்லை. நாங்கள் தொடர்ந்து போராடுவோம். என்றார். இந்தியப் பிரதமருக்குக் அஞ்சாமல் இலட்சிய ஆவேசத்தோடு நெஞ்சு நிமிர்த்தி பிரபாகரன் கூறிய பதில் எம்.ஜி.ஆரின் நெஞ்சைத் தொட்டது.பிரதமர் கருத்தை உங்களிடம் தெரிவித்தேன். *உங்கள் பதிலை அவரிடம் தெரிவிக்கிறேன். உங்களுக்கு விரும்பமில்லாததை வற்புறுத்தி ஒப்புக்கொள்ளவைக்கும் வேலைக்கு நான் உடந்தையாக இருக்கமாட்டேன்*என்று முதல்வர் எம்.ஜி.ஆர் கூறினார்.

மறுபக்கத்தில் சார்க் மாநாடு நடக்கும் மாளிகைக்கு முன் ஆயிரக்கணக்கில் திரண்டு கறுப்புக்கொடி காட்டிப் போராட்டத்தில்நாம் ஈடுபட்டோம்.

முன்வாயில் வழியாக ஜெவர்த்தனா வரமுடியவில்லை. பின்வாயில் வழியாக இரகசியமாக அழைத்துச் செல்லப்பட்டார். கர்நாடக தமிழ் போரவைப் பொதுச் செயலாளர் சண்முகசுந்தரம், பாவிசைக்கோ முதலிய ஆயிரக்கணக்கான தோழர்களும் நானும் கைது செய்யப்பட்டோம். சார்க் மாநாட்டிற்கு பின்பு பரதமர் ராஜீவ் பிரபாகரன் மீது கடும்கோபம் கொண்டார்.

இலங்கைப் பிரச்சினையில் பெயரளவிற்கு ஏதாவது செய்து புகழ் சம்பாதிக்க அவர் போட்ட திட்டத்தை பிரபாகரன் ஏற்காததால், அவர் ஆத்திரம் அடைந்தார். இதைப் பயன்படுத்திக் கொண்டு பிரபாகரனை ஒழித்துக் கட்டும் முயற்சிகள் ஆரம்பமாயின.போட்டி இயக்கங்களுக்கு ஏராளமான ஆயுதங்களும் தாராளமாக பணமும் வழங்கப்பட்டன.

*தமிழ்நாட்டில் பிரபாகரனை படுகொலை செய்ய இந்த இயக்கங்கள் திட்டமிட்டன.* இதைப் புரிந்து கொண்ட பிரபாகரன் தமிழீழம் செல்லத் திட்டமிட்டார். சார்க் மாநாட்டிற்கு பின் இந்தியாவில் இருந்து கொண்டு செயற்படுவது கடினம். என்று உணர்ந்துகொண்ட பிரபாகரன், தமிழகத்திலிருந்த பயிற்சி முகாம்கள், அலுவலகங்கள் ஆகியவற்றை மூடிக் கொண்டு, தமது இயக்க அங்கத்தவர்கள் அனைவரையும் தாயகம் அனுப்பிவிட்டு, தானும் புறப்படத் தயாரானார்.

1987 ஆம் ஆண்டு, ஜனவரி, 4ஆம் நாள் தாயகம் புறப்பட்டுச் சென்றார். செல்வதற்கு முன் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களை சந்தித்து பிரியாவிடை பெற்றார் பிரபாகரன். விரைவிலேயே போர் மேகங்கள் சூழப்போகின்றன என்பதை அப்போது யாரும் உணர்ந்திருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷவுக்கு தேவையான சட்டமே நாட்டில் உள்ளது

## அனைத்துலக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

பல்லைக்கழக மாணவர்கள் தமக்கு ஏற்படும் ஏதோ ஒரு அநீதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதனை சட்டவிரோதமான நடவடிக்கையாக காட்டினாலும், அரசுக்கு சார்பான ஆர்ப்பாட்டங்களும் நடவடிக்கைகளும் சட்டவிரோதமானவை அல்ல என அனைத்து பல்லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனநாயகமும் சட்டமும் ராஜபக்ஷ நிர்வாகத்தின் கட்டளையின்படியே செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தமக்கு ஏற்படும் அநீதிகளுக்கு எதிராக எதிர்ப்பை வெளியிட நாட்டில் வாழும் சகல பிரஜைகளுக்கும் உரிமையுள்ளது.

நாட்டில் ஜனநாயகம் செயற்பாட்டில் உள்ளதென்றால் அநீதிக்கு எதிராக எதிர்ப்புகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினால் அது மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும்.

ஆனாலும் அரசாங்கத்திற்கு ஆதரவான பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அதற்கு எதிராக சட்டம் செயற்படுத்தப்படவில்லை. இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் போது குற்றத் தடுப்பு பிரிவினரோ சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளோ தலையிடுவதில்லை.

ஜனாதிபதியின் மகன் கொழும்பு கார் பந்தயம் நடத்த கொழும்பில் வீதிகள் மூடப்பட்டன. பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெற்ற போது புகையிரதத்தை நிறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளின் போது மக்களுக்கு இடையூறுகள் ஏற்படாதா?.

இலங்கையில் அமுலில் இருப்பது ஜனநாயகமல்ல. ராஜபக்ஷவின் தேவைக்கு அமையவான வரையறுக்கப்பட்ட சட்டமே நாட்டில் செயற்படுத்தப்படுகிறது.

பொலிஸார் ராஜபக்ஷவின் தேவைகளையே நிறைவேற்றி வருகின்றனர் என்றார். (அ-2)

# பொறுப்புடன் பேசக்கூடிய ஊடக அமைச்சர் தேவை

கெஹலிய ரம்புக்வெலவை விட பொறுப்புடன் பேசக் கூடிய ஊடகத்துறை அமைச்சர் ஒருவர் நாட்டுக்கு தேவை என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக்க பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கொழும்பில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் ,கள்ளச் சாராயம், ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்ட பலர் இந்த அரசாங்கத்தில்உள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதனோல் மதுசாரத்தை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவையில்லை என்றே நாங்கள் கூறுகிறோம்.

இலங்கையில் இருக்கும் மேலதிகமான அரிசி, சோளம் போன்ற வற்றை பயன்படுத்தி இதனை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியும். அப்படி செய்தால் வெளிநாட்டுக்கு பெரும் தொகை பணம் போகாது.

எதனோல் சம்பவத்துடன் அரசாங்கத்தின் இரு அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறப்படும் விடயம் தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் அளித்த பதிலை நான் அவதானித்தேன்.

அவ்வாறான ஒருவரிடம் அதற்கு மேல் பதிலை எதிர்பார்க்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சனுக்கும் அவருக்கும் இடையில் ஏற்பட்ட விவாதத்தை நாடாளுமன்றத்தில் பார்த்துக் கொண்டிருந்த பொழுது எமக்கு வெட்கமாக இருநதது.

இதனால் இதனை விட பொறுப்புடன் பேசும் ஊடகத்துறை அமைச்சர் ஒருவர் நாட்டுக்கு தேவை. ஊடகத்துறை அமைச்சர் பிரதமருக்கு ஆதரவாக பேசுவதில்லை.

விருப்பு வாக்குகளை அள்ளி கொள்ளலாம் என்பதால் அவர் பிரதமருக்கு ஆதரவாக பேசுவதில்லை. காரணம் பிரதமரும் கண்டியை சேர்ந்தவர். ஊடகத்துறை அமைச்சரும் கண்டியை சேர்ந்தவர். பிரதமரை அந்த பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற தேவை சிலருக்கு இருக்கின்றது.

அத்துடன் அரசாங்கத்தில் உள்ள கள்ளச் சாராயம், ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எதனையும் பேசுவதில்லை. எமக்கு எதிரான சிறிய சம்பவத்தை பிடித்து கொண்டு முத்திரை குத்தி வருகின்றனர் என்றார். (அ-2)

# ஆலய புனரமைப்புக்காக மேலதிக மானியங்கள்

## அமைச்சர் டக்ளஸ்

எமது அரசாங்கம் எல்லா மதங்களையும் சமமாகப் பார்ப்பதால் இந்த வருடமும் நாடளாவிய ரீதியில் இந்து மத ஆலயங்கள் பலவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென நிதியொதுக்கீடுகளை செய்யவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்திற்கென 61 இந்து ஆலயங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேற்படி ஆலயங்களுக்கான காசோலைகளை வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆலயங்களின் முழுமையான புனரமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதாமலிருக்கலாம். தற்போது கிடைத்துள்ள நிதியை பயன்படுத்திக் கொள்ளுங்கள். எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்துடன் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடி மேலதிக நிதி மானியங்களை வழங்க நடவடிக்கை எடுப்பேன். முன்னுரிமைகள் அடிப்படையில் இங்குள்ள இந்து ஆலயங்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலர் உட்பட இந்து ஆலய நிர்வாகத் தரப்பினர் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சபரீசகானம் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து சபரிமலை அகில இலங்கை யாழ். கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தானத்தில் இன்று நடைபெறுகின்ற மகர ஜோதி மண்டல பூர்த்தி பெருவிழாவை முன்னிட்டு சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் தொடுத்த சபரீச கானம் எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

இதன்போது இந்நூலின் ஆய்வுரையை ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் நிகழ்த்த வெளியீட்டுரையினை சைவப் புலவர் கந்த சத்தியதாசன் ஆற்றவுள்ளார். (அ-2)


# மீறும் மீனவருக்கு எதிராக கடும் நடவடிக்கை

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இந்த சட்டங்கள் அமுல்படுத்தப்பட உள்ளன. அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை மீனவர்களின் படகுகளுக்கான அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட உள்ளது.

புதிய சட்டத்தின் அடிப்படையில் படகு உரிமையாளருக்கு 15 இலட்ச ரூபா அபராதம் விதிக்கப்பட உள்ளது. படகில் பயணிக்கும் மீனவர்களுக்கு நாட்டின் சாதாரண சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. எல்லை மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 227 இலங்கையர்கள் இந்திய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அத்து மீறல்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக 267 இந்திய மீனவர்கள் இலங்கை சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக நிலவி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கை- இந்திய மீனவர்களுக்கு இடையில் அடுத்த மாதம் விசேட பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)


யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வைரவிழா நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வில் கௌரவிப்பு நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் விருந்தினர்கள் மாணவனொருவனை கௌரவிப்பதனையும் மாணவிகளின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதல்வர் கலந்துரையாடல்

இலங்கை மற்றும் இந்திய மீனவர்கள் மத்தியில் சந்திப்பை ஏற்படுத்தும் வகையில் முக்கிய உயர்மட்ட கூட்டம் ஒன்றை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் நடத்தியுள்ளார்.

இந்தத் தகவலை நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் தாக்கப்படுவது குறித்து இரண்டு நாட்டு மீனவர்களுக்கு மத்தியில் சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஏற்கனவே ஜெயலலிதா மத்திய அரசாங்கத்திடம் கோரியிருந்தார். அதில் தமிழ் நாடும் பங்கேற்கவேண்டும் என்றும் ஜெயலலிதா கேட்டிருந்தார்.

இதன் அடிப்படையிலேயே அவர் உயர்மட்ட கூட்டத்தை நடத்தியுள்ளார்.

இக் கூட்டத்தில் தமிழக நிதியமைச்சர் பன்னீர்செல்வம், மின்சாரத்துறை அமைச்சர் நாதம் ஆர் விஸ்வநாதன், மீன்பிடித்துறை அமைச்சர் கே.ஜெயபால், பிரதம செயலாளர் சீலா பாலகிருஸ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (அ-2)

# தங்க பிஸ்கட்டுக்களை கடத்தி வந்தவர் கைது

ஆயிரத்து 800 கிராம் எடை கொண்ட 18 தங்க பிஸ்கட்டுகளை குத வழியாக மறைத்து டுபாயிலிருந்து இலங்கைக்கு கடத்தி வந்த நபர் ஒருவரை சுங்க பிரிவினர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர். டுபாயிலிருந்து இலங்கைக்கு பயணித்த ஸ்ரீலங்கன் எயார் லைன்சுக்குச் சொந்தமான விமானத்தில் நேற்று முன்தினம் காலை வந்திறங்கிய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய போதை ஒழிப்பு பிரிவினர் நடத்திய திடீர் சோதனையின் போது தங்க பிஸ்கட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன. நியூசிலாந்தில் தயாரிக்கபட்ட 24 கரட் தங்க பிஸ்கட்டுகள் ஆயிரத்து800 கிராம் எடைகொண்டவை என்றும் குதவழியூடாக தங்கம் கடத்தி வந்த சம்பவங்களுடன் ஒப்பிடும் போது இதுவே ஆகக் கூடிய தொகை என விமான நிலைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.தங்க பிஸ்கட்டுகளை விமான நிலையத் துக்கு வெளியே கொண்டு வந்து கொடுத்தால் அவருக்கு ஒரு இலட்ச ரூபா தரு வதாக கூறியே அவரிடம் தங்க பிஸ்கட்டுகள் ஒப்படைக் கப்பட்டதாக சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.சுங்க பிரிவினர மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நபர்கள் பராமரிக்கப்படுவார்கள்

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

**வடமாகாணத்தில் யுத்த சூழ்நிலையால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு நடமாட முடியாதுள்ளவர்களில் சிலர் பராமரிப்பு இன்மையால் உயிரிழந்துள்ள சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் இவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை வடமாகாணசபை பொறுப்பேற்கவுள்ளதாகவும் எதிர்காலத்தில் பராமரிப்பு விடுதிகளை விஸ்தரிக்கவுள்ளதாகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வவுனியா நெளுக்குளத்தில் அமைந்துள்ள சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோரை பராமரிக்கும் விடுதி திருத்த வேலைகளை நேற்று முன்தினம் அமைச்சர் பார்வையிட்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக பல இளைஞர் யுவதிகள் நடமாட முடியாது காணப்படுகின்றனர். இவர்களில் சிலர் தகுந்த பராமரிப்பு இன்மையால் மரணித்தும் உள்ளனர். இந்நிலையில் அவர்களை வட மாகாண சபையின் கீழ் சுகாதார அமைச்சு பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் வவுனியா ஆயுர்வேத வைத்தியசாலையில் யுத்த காலத்தில் அரச சார்பற்ற நிறுவனம் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களை பராமரிக்க பயன்படுத்திய விடுதியை திருத்தம் செய்து எதிர்வரும் மாதத்தில் இருந்து இவ்வாறு பாதிக்கப்பட்டவரகளை பராமரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ் விடுதியில் தங்குமிடம், உணவு உட்பட பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களை முழு நேரமும் பராமரிப்பதற்கான செயற்பாட்டையும் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

ஆயினும் தற்போது 20 தனி அறை வசதிக்ளுடன் விடுதி காணப்படுகின்றது. ஆனால் பலர் இதற்கு விண்ணப்பித்துள்ளார்கள் .இதை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இவ்வாறான பராமரிப்பு விடுதிகளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இப் பராமரிப்பு விடுதியில் தங்கி வாழ விருப்பமுள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள சுகாதார அமைச்சின் அலுவலகத்திலும் வவுனியா தாதியர் கல்லூரியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின் உப அலுவலகத்திலும் வவுனியா சித்த ஆயுர்வேத வைத்தியசாலையிலும் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

(அ-9-266)

## நீதிமன்றிலிருந்து கைதி தப்பியோட்டம்

வவுனியா நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்காக கொண்டுவரப்பட்டிருந்த கைதியொருவர் தப்பியோடியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த கைதி வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந் நிலையில் குறித்த கைதி நீதிமன்றிலிருந்தே தப்பியோடியுள்ளதாகவும் .பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு தப்பியோடிய கைதிக்கு நீதிமன்றத்திலும் வழக்குகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்ற நிலையில் கைதியை பொலிஸார் தேடிவருகின்றனர்.

(அ-9-250-266)

## சான்றிதழ் பயிற்சி நெறி

கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி பிரிவில் 2014 ஆம் ஆண்டிற்கான ஆடை வடிவமைத்தலும் கைவேலைக்குமான சான்றிதழ் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம அபிவிருத்திப் பிரிவு மற்றும் மாதர் சங்கங்களில் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு விண்ணப்ப முடிவுத்திகதி நாளை மறுதினம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகும்.

இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறி எதிர்வரும் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி காலை 9மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பயிற்சியின் போது மாதாந்தம் ஊக்குவிப்பு பணமும் வழங்கப்படவுள்ளது.

எனவே பங்குகொள்ள விரும்பும் மகளிர்களை கரைச்சி பிரதேச செய்லக கிராம அபிவிருத்தி பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(அ-9-254)




# ஆனந்தபுரம் கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் இரத்து

## நீருக்கு அலையும் மக்கள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் கிராமமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு அலைந்து திரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

ஆனந்தபுரக் கிராமத்தினுள் 9 சிறு கிராமங்கள் காணப்படுகின்றன.

இக்கிராமங்கள் கூடியளவு உவர்நீர்ப் பிரதேசமாக காணப்படுகின்ற நிலையில் 5, 6 ஆம் வட்டாரங்களுக்குட்பட்ட கிராமங்களில் நன்னீர் கிடைப்பதில்லை.

இதனால் இக்கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் குடிநீர் தேவையான கிராமங்களை இனங்கண்டு 15 பிளாஸ்டிக் நீர் கொள்கலன்களை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்ற அமைச்சின் நிதி அனுசரணையோடு பிரதேச சபையினர் நீரை விநியோகித்து வந்தனர்.

பின்னர் இச்சேவை இடை நிறுத்தப்பட்டமையால் இக்கிராமத்தின் வரட்சியை சுட்டிக்காட்டி அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியுடன் கடந்த ஒக்டோபர் மாதம் வரை குடிநீர் விநியோகம் இடம்பெற்றது.

தற்போது அச்சேவையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அப்பிரதேசத்தில் வைக்கப்பட்டிருந்த 15 பிளாஸ்டிக் நீர்க் கொள்கலன்களும் எடுத்துச் செல்லப்பட்டு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக போடப்பட்டுள்ளது.

இவ்வாறாக குடிநீர் விநியோகம் தடைப்பட்டதனால் இங்குள்ள 225 குடும்பங்களில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீரின்றி அலையவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே தமக்கு குடிநீரைப் பெற்றுத்தர ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)

# நான்கு பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன

(மல்லாவி)

நாடளாவிய ரீதியில் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இடைநிலைப் பாடசாலைகளை விருத்தி செய்யும் திட்டத்தில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள தரம் 6 தொடக்கம் 13 வரையுள்ள 4 பாடசாலைகள் 1 ஏபி தரப்பாடசாலைகளாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலனின் 04.12.2013 கடிதத்தின் பிரகாரம் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் மு/யோகபுரம் ம.வி, மு/மாங்குளம் ம.வி, மு/பாண்டியன்குளம் ம.வி, மு/முத்தையன்கட்டுவலதுகரைம.வி ஆகிய பாடசாலைகளே தரம் 1சி பாடசாலைகளாக இருந்து 1ஏபி பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இப்பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் ஏற்கனவேயிருந்த கலை, வர்த்தகப் பிரிவுகளுடன் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மாணவர்கள் கல்வி பயிலும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் மேலும் பல வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-9-15)





தேசிய நல்லிணக்க கவிஞர்கள் சம்மேளனத்தினரால் 24 ஆவது விருது வழங்கும் நிகழ்வில் வன்னி பகுதியைச் சேர்ந்த இரண்டு கவிஞர்கள் காவிய பிரதீபா விருதினை பெற்றுக் கொண்டுள்ளனர். இதில் இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய் என்ற கவிதை நூலுக்கு யோ.புரட்சிக்கும், நிலவைத்தேடும் வானம் என்ற கவிதை நூலுக்கு வன்னியூர் செந்தூரன் ஆகியோருக்கே இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் குண்டு வெடிப்பு; 37 பேர் பலி; 59 பேர்படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக்கில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 37 பேர் உடல் சிதறி பலியாயினர். 59 பேர் படு காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.**





இச்சம்பவங்கள் கிறிஸ்மஸ் தினத்தன்று இடம்பெற்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

கிறிஸ்துமஸ் தினமான நேற்று தலைநகர் பாக்தாத்தின் தோரா பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது.

அங்கு ஏராளமானோர் திரண்டிருந்த நிலையில், தேவாலயம் அருகே பயங்கர கார் வெடிகுண்டு வெடித்து சிதறியது.

இதில் 26 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியானார்கள். மேலும், 38 பேர் படுகாயம் அடைந் தனர்.

அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் பகுதியான அதோ ரியனில் உள்ள சந்தை ஒன்றில் பயங்கர குண்டு வெடித்தது. இதில் 11 பேர் உயிரிழந்தனர். 21 பேர் படு காயம் அடைந்தனர்.

கிறிஸ்துமஸ் நாளில் நடத்தப்பட்ட இந்த இரு தாக்குதல்களுக்கும் எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப் பேற்கவில்லை. இருப்பினும் அல் பெய்தா கைவரிசையாக இருக்கலாம என அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# யாசர் அராபத் மரணம் இயற்கையானது - ரஷ்யா



(மாஸ்கோ)

பாலஸ்தீனத் தலைவர் யாசர் அராபத் விசம் கொடுத்து கொல்லப்பட வில்லை. அவரது மரணம் இயற்கையானது என்று ரஷ்யா அறிவித்துள்ளது.

பாலஸ்தீன தலைவர் யாசர் அராபத் கடந்த 2004 ஆம் ஆண்டு மரணம் அடைந்தார்.

அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாகவும், அவரை மெல்ல கொல்லும விஷம் கொடுத்தும், கதிர்வீச்சு மூலமும் கொல்லப்பட்டதாக பல்வேறு தகவல்கள் வெளியானது. ஆனால் இதனை உறுதி செய்ய முடியாத நிலை இருந்து வந்தது. இதனால் அவரது உடல் உறுப்புகளை எடுத்து பல்வேறு நாடுகள் ஆய்வுக்குட்படுத்தின.


அரபாத்தின் உடல் உறுப்புகளை ஆய்வு செய்த சுவீஸ் நாட்டின் நிபுணர்குழுவினர் யாசர் அராபத் விசம் கொடுத்து கொல்லப்பட்டதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என கடந்த மாதம் அறிவித்தது.

இந்நிலையில் ரஷ்ய நாட்டின் நிபுணர் குழுவினரும் யாசர் அராபத் தின் உடல் உறுப்புகளை கொண்டு, அவரது மரணத்துக்கான காரணத்தை கண்டறிய தீவிர உடல்கூறு சோதனை நடத்தியது. இப்போது ரஷ்ய நிபுணர்குழுவும் யாசர் அராபத் விசம் கொடுத்து கொல்லப்படவில்லை என்றும் அவரது மரணம் இயற்கையானது என்றும் அறிவித்துள்ளதாக அந்நாட்டின் செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது. (2)



ஆபிரிக்கத் தலைவர்கள் நேற்றுமுன்தினம் சூடானிற்கு விஜயமொன்றை மேற்கொண்டனர். இவர்கள் சூடான் மற்றும் தென்சூடான் ஆகிய இரு நாட்டுத் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தையை நடத்தவே வந்துள்ளனர்.

# ஜப்பான் பிரதமருக்கு சீனா கடும் கண்டனம்



ஜப்பான் தலைநகர் டோக்கியோ வில் இருக்கும் யசுகுனி போர் நினைவிடத்திற்கு, ஜப்பானின் பிரதமர் ஷின்சோ அபே நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

அந்நாட்டின் இராணுவ ஆக்கிர மிப்பு வரலாற்றினை பெருமைப்படுத் தும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள போர் நினைவிடத்திற்கு பிரதமர் சென்றதை சீனா கடுமையாக எதிர்த் துள்ளது.

இதுதொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளரான குவின் கங் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'ஜப்பானின் இராணுவ ஆக்கிரமிப்பு, காலனித்துவ ஆட்சி போன்ற வரலாறுகளை அழகுபடுத்தும் விதத்தி லேயே ஜப்பானியத் தலைவர்கள் யசுகுனி நினைவிடத்திற்கு செல்லுகின்றனர்.

பிரதமரின் இந்த விஜயம் சீன மற்றும் ஆசிய மக்களின் உணர்வுகளை மிருகத்தனமாக மிதிப்பது போலுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (2)

# இரு ஆண்டுகளுக்கான பட்ஜெட்டில் பராக் ஒபாமா கையெழுத்திட்டார்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த இரு ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டார்.

அமெரிக்காவில் புதிய வரவு செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் கிடைக்காமல் கடந்த ஒக்டோபர் மாதம் அரசு நிறுவனங்கள் முடங்கி கிடந்தனர். பலர் வேலை வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டது.

இது போன்று ஒரு நிலை அடுத்த 2 ஆண்டுகளில் ஏற்படாமல் இருக்க அந்நாட்டு ஜனாதிபதி 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கையொப்பம் இட்டார்.




இது குறித்து அமெரிக்க வெள்ளை மாளிகை நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

2014ஆம் ஆண்டு பாதுகாப்பு அதிகார சட்ட முன்மொழிவில் ஒபாமா கையொப்பமிட்டுள்ளார். மேலும் பாதுகாப்பு மற்றும் போர் செலவுகளுக்கு 60 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர் வரை ஒப்புதல் அளிக்கப பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனெட் அவை மற்றும் பிரதிநிதிகள் அவை இந்த 2 நிதி ஆண்டு வரவு செலவு திட்டங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. ஒபாமாவும், இத்திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளார என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# அமெரிக்கா, கனடா நாடுகளில் பனிப்புயல்; மக்கள் இருளில் தவிப்பு



அமெரிக்கா மற்றும் கனடாவில் கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது. இதனால் மின்சாரம் தடைப்பட்டு 5 இலட் சம் பேர் இருளில் தவிக்கின்றனர்.

குளிர் காரணமாக இது வரை 24 பேர் உயிரிழந்தனர். அமெரிக்காவின் மத்திய, வடகிழக்கு பகுதிகளிலும் கனடாவின் கிழக்கு பகுதியிலும் கடுமையான பனிப்புயல் வீசிவருகிறது. மைனஸ்15 டிகிரி அளவுக்கு இங்கு வெப்பநிலையுள்ளது. இதனால், எங்கு பார்த்தாலும் வெண் கம்பளி போர்த்தியது போன்று, பனிப்படலம் காணப்படுகிறது. தொடர் பனிப்புயல் காரணமாக, மின்கம்பிகள் இறுகி அறுபட ஆரம்பித்துள்ளன. பல பகுதிகள இருளில் மூழ்கியுள்ளன. 5 இலட்சம் பேர் வரை இருளில தவித்து வருகின்றனர. இரு நாடுகளிலும் மின்துறை ஊழியர்கள் இரவு, பகலாக அறுந்த மின்கம் பிகளையும், பழுதடைந்த டிரான்ஸ் போர்மர்களையும் சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பனிப்புயலால், குடிநீர் விநியோகமும் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. ஏரிகளில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாக மாறிவிட்டது.

ஓரிரு நாட்களுக்கு இந்த பனிப்புயல் தொடரும் என்றும், இப்போதைக்கு அதன்தாக்கம் குறைய வாய்ப்பில்லை என்றும் அமெரிக்காவின் தேசிய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. குளிரை தாக்குப்பிடிப்பதற்காக பொதுமக்கள் காஸ், ஜெனரேட்டர் மூலம் இயங்கும் வெப்பநிலை கருவிகளை பயன்படுத்தி வருகின்றனர். குளிரை தாக்குப்பிடிப்பதற்காக, தீயை உருவாக்கும் எந்த கருவியையும் வீட்டில் பயன்படுத்த வேண்டாம் என்று தீயணைப்பு துறை அதிகாரிகள் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். மெழுகுவர்த்திகளை கூட மொத்தமாக வைத்து எரிக்க வேண்டாம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர். (2)

# தமிழக மீனவர்கள்; காவல் நீடிப்பு

இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 171 பேரின் காவல் நீடிக்கப்பட்டது.

தமிழக மீனவர்களின் காவல் நிறைவடைந்ததை தொடர்ந்து இலங்கையில் உள்ள திருகோணமலை நீதிமன்றத்தில் நேற்றுமுன் தினம் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர் களது காவலை ஜனவரி 6ஆம் திகதி வரை நீடித்து நீதிபதி உத்தரவிட்டார்.

தற்போது 227 தமிழக மீனவர்கள், 77 விசைப்படகுகளுடன் இலங்கை அரசின் பிடியிலுள்ளனர். (2)

# பாக்.வர்த்தக அமைச்சர் இந்தியாவிற்கு வருவார்



(இஸ்லாமாபாத)

பாகிஸ்தான் வர்த்தக அமைச்சர் அடுத்த மாதம் இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார்.

பாகிஸ்தான் வர்த்தகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் குர்ராம் டாஸ்திகிர் கான் எதிர்வரும் ஜனவரிமாதம் இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார்.

அநேகமாக எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையில் நடைபெறும் சார்க்தொழில் அதிபர்கள் கூட்டத்தில் அவர் கலந்து கொள்வார்.

இந்த சுற்றுப் பயணத்தின் போது அவர் இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுந்த திட்டமிடல் மூலம் புதுவருட பயிராபத்தை தவிர்க்க வேண்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே! புதுவருட வாழ்த்துக்கள்!

வழமை போன்று பலத்த எதிர்பார்ப்புடன் கொண்டாடப்படும் புதுவருடம் இம்முறை விவசாய செய்கையாளர்களைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சியாக வரவில்லை. இதற்கு காரணமுமுண்டு. வழமைக்கு மாறாக இம்முறை மழை பொய்த்துவிட்டது.

காலபோகத்திற்கான விவசாய செய்கையில் வடபகுதியில் இதுவரையில் கிடைத்த மழையினளவு சென்ற வருடங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவானதாகும். "நீரின்றி இவ்வுலகம் ஏது" என்ற சொற்பொதிக்குள் பல அர்த்தங்கள் உண்டு.

இதனை தற்போதைக்கு இயற்கையின் விபரீதமென்று நாம் பேச்சளவில் சுருக்கிக் கொண்டாலும் வடமாகாணத்து விவசாய செய்கையை ஒட்டுமொத்தமாக இது சுருக்கிக் கொள்ளுமோ என்ற அச்சம் மேலோங்கத் தொடங்கியிருக்கின்றது.

வருட ஆரம்பம் குதூகலமாக புதிர்வெட்டி பொங்கலிட்டு கொண்டாடுகின்ற காலமாக இல்லாது எறிந்த நெல் அனைத்தும் முளைத்து நீரின்றி கருகி பின் மீண்டும் நெல்லெறிந்து அது முளைத்து வர புல்முளைத்து அதனையும் களைபிடுங்கி காப்பாற்ற நினைக்கையில் மீண்டும் மழை பொய்த்து அனைத்தையும் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. எதிர்வரும் ஆண்டு வரட்சியின் உச்சக்கட்டமாக இருக்க வாய்ப்புக்கள் அதிகம்.

நாம் வாழும் பிரதேசம் வரண்ட வலயமாகினும் இப்பிரதேசத்திற்கு வந்து போகின்ற அனைவருமே இங்குள்ள பயிர்ச்செய்கையையும் பச்சைப்பசேலென்ற விளைநிலத்தையும் பார்த்து விட்டு இது வரண்ட வலயமா என ஆச்சரியப்பட்டதுண்டு.

ஆனால் இம்முறை அது நிஜமாகிவிடுமோ என கவலைகொள்ள வைத்திருக்கின்றது. கிடைத்த மழைநீரை தேக்கி வைத்திருந்தாலும் அது எவ்வளவு காலத்திற்கு போதுமானது? விவசாய பெருமக்களுக்கு புது வருடம் சோதனை நிறைந்த காலமாக இருக்கப்போகின்றதென்பதை நாம் தற்போது அனுமானிக்க முடியும் அல்லவா!

இக்காலகட்டத்தில் நாம் அவதானமாக திட்டமிட்டு வரவிருக்கும் பயிராபத்தை தவிர்க்க வேண்டும்.

காலநிலை மாற்றம் உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் பரந்துபட்ட அளவில் பாதித்திருக்கின்றது என்பதைப் பார்க்கும் போது எமது நாட்டை விட்டுவைத்திருப்பது சாத்தியமற்றது. இருப்பினும் உற்பத்தியில் முன்னேற்றம் கண்டுகொண்டிருக்கும் இந் நேரத்தில் இப்படியான விபரீதம் நிகழ்வது எமது விவசாய செய்கையை கணிசமான அளவில் பாதிக்கவே செய்யும். பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து ஒருவாறு தக்கவைத்துக் கொண்ட விவசாயப் பெருமக்களுக்கு இது வொரு நற்செய்தியல்ல. ஆனாலும் வடபகுதி விவசாயப் பெருமக்கள் எதற்கும் சளைத்த வர்கள் அல்லர்.

இவ்வாறான இடர்காலத்தின் போது அவதானமாக திட்டமிட்டு பயிர்செய்தால் இருக்கின்ற நீர் வளத்தை வினைத்திறனாக பயன்படுத்தி பயிர்ச்செய்கையை செய்யலாம். இங்கே முக்கியமான விடயம் நீரின் விரயத்தை தவிர்ப்பதும் கிடைத்த நீரை வினைத்திறனாக பயன்படுத்துவதேயாகும்.

காலபோகத்தின் பிற்பகுதியும் சிறுபோக காலமும் வெப்பநிலை அதிகரித்ததாக காணப்பட வாய்ப்பு அதிகம். இதனால் நீருக்காக நாம் அலைய வேண்டியும் ஏற்படலாம்.

கிடைக்கின்ற நிலத்தடி நீரை வீணாக்காமல் சிக்கனமாக செலவுசெய்ய வேண்டும். அநேகமான இடங்களில் நீர் தேங்காது குளங்கள், தரவைகள் வற்றியதுபோல காட்சியளிப்பது எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கின்றது. குளங்கள் செப்பனிடப்பட்டும் நீர் இன்றி காட்சியளிப்பது இயற்கையின் சீற்றத்தை உணர்த்தியிருக்கின்றது.

மழையை நம்பி பயிர்ச்செய்கையை நம்பியிருக்க முடியாது விவசாய பெருமக்கள் தத்தளிப்பதை உணரமுடிகின்றது. விபரீதம் நடக்க முன்னர் மக்களை அறிவுறுத்தி கிடைக்கும் நீரை சேமிக்கவும் சிக்கனமாக பாவிக்கவும் அறிவுறுத்த வேண்டும். சென்ற வருடம் எதிர்பார்த்த மழை பெய்திருந்தும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நிலத்தடி நீருக்கு பல இடங்களில் நீரின்றி அவஸ்தைப்பட்டதை நாமும் அறிவோம். அதற்கும் மேலாக விவசாயத்தினால் நட்டப்பட்ட விவசாயிகளின் அவலத்தைப் போக்கவும் யாரும் இல்லை.

மழை பெய்வது இப்போதும் அங்குமிங்குமாக தூறலுடன் நின்றுவிடுகின்றது. வழக்கமாக பெய்யும் மழைவீழ்ச்சியில் கணிசமானளவு கூட இன்னும் கிடைக்கவில்லை. இனிவரப்போகும் வரட்சிக்கு மழை வீழ்ச்சியின் அளவு காரணமாக அமைய லாம்.

மழைவீழ்ச்சியின் பரம்பல் யாழ்ப்பாணத்தில் அளக்கப்படுவதும் அதனை ஏனையவற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது குறைவாக இருப்பதுவும் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து பார்க்கும் போது முன்கூட்டியே இந்த விபரீதத்தை தவிர்ப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பது புலனா கின்றது. குடிநீர் தாராளமாக கிடைக்கின்றதே என எவரும் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. நீரினால்தானே பிரச்சினைகளும் ஆரம்பிக்கின்றன.

மக்களுக்கு முன்கூட்டியே அறிவித்து அதற்கான மாற்று ஏற்பாடுகளை அவர்கள் மூலமாகவே செய்ய தூண்டவேண்டும். நீருக்கான தேவையை பூர்த்தி செய்ய நாம் திட்டமிட்டு செயலாற்றவேண்டும். மக்களுக்கான குடிநீர் வசதிகளும் முழுமைபெற வேண்டும்.

முத்தையன்கட்டு மற்றும் விசுவமடு நீர்த்தேக்கங்கள் அடுத்த ஆண்டுக்கான சேமிப்பிற்காக திருத்தப்பட்டு முழுமையாக பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்பட வேண்டும.

நீரை அதிகம் உள்ளெடுக்காத தாவரங்களை தேர்ந்தேடுத்து பயிர்ச்செய் கையில் ஈடுபடுத்த வேண்டும். இன்னும் மழைநீரினதும் குடிநீரினதும் பயன்பாடு பற்றி மக்களுக்கு அறிவூட்ட வேண்டும். மழைவீழ்ச்சி குறைந்ததால் விவசாய செய்கையில் மாற்றத்தையேற்படுத்தி நீரின் கிடைதன்மைக்கேற்ப பயிர்களை தெரிவுசெய்து விவசாய பெருமக்களை பயிராபத்திலிருந்து காப்பாற்ற அனைவரும் பாடுபட வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 40-I



2012 இல் இரணைமடுக்குள கதவுகள் திறந்து வான்பாய்ந்த காட்சி இவ்வருடத்தில் இல்லை. இதுவே மழைவீழ்ச்சி குறைவின் சாட்சி

# க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சை முடி வுகள் வெளியாகியுள்ளன. இவ் முடிவுகளில் முன்னணிப் பெறு பேறுகளை பாடசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர். முன்ன ணிப் பெறு பேறுகளைப் பெற்ற மாணவர் களின் விபரம் வருமாறு,

### யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**கணிதப்பிரிவு**

ரி. சிவதாஸ்-3ஏ, ஆர். கிருஷ்ஷிகா-3ஏ, ரி.தர்சிகன் -2ஏபி, எஸ். செந்தூர்குமரன்-3பி, எஸ்.சர்மா விசாகன்-ஏ2பி, வி.ராஜ்குமார்- ஏ2பி, பி.சத்தியகுகன்-3பி, பா.பரந்தாமன்-3பி, ஆர். நிதீஷ்ராம்-3பி, என்.பிரதீபன்- 2பிசி, என்.கேகயன்- 2பிசி, ஏ.விமலினி- பி2சி, யு.கிருத்திகா- பி2சி, ஆர்.கீர்த்தனன்- பி2சி, கே.கஜசுமனி-பி2சி

**விஞ்ஞானப்பிரிவு**

வை. கௌதமி- ஏ2பி, கே.டிலக்ஷனா-3பி, என்.கஜீபன்-ஏபிசி, எம்.கேதாரனி-2பிசி, பி.ஜென்ஷி-பி2சி, கே.அபிராமி-2பிசி, எஸ். தபிரா- 2பிசி, ரி.துர்க்கா- பி2சி

**கலைப்பிரிவு**

ரி.வின்சன்-3ஏ, எஸ்.கமலதீபன்-3ஏ, எம்.சுயிதா- 2ஏபி, பி.நிதுர்சன்- 2ஏசி, வை. நிர்ச்சனா- ஏ2பி, எம்.கிருத்திகா- ஏ2பி, எஸ்.இந்துசா- 3பி, எஸ். பிரதீபா- ஏபிசி, எஸ்.பிந்துஜன்- ஏ2பி, பி.மோகனரதி- ஏபிசி, கே.வண்ணமதி-ஏபிசி, என். ஜசிந்தன்-ஏபிசி, கே.விஜயதாரன்- ஏபிசி, எஸ். கம்சிகா-3பி, கே.சுகிர்னா- ஏபிசி, எம்.லக்சியா- ஏ2பி, எஸ்.தினேசிகா- 3பி, கே.நிகிந்தினி- ஏபிசி, எஸ்.தர்மிகா- ஏபிசி, வி.சொருபினி-ஏபிசி, ஏ.குகதாசன் ஏபிசி,

**வர்த்தகப்பிரிவு**

ஜே.கஜிந்திகா - 2ஏபி, பி.ஜெயவீகிர்தா-2ஏபி, ரி.துஜீவா- 2ஏபி, எஸ். நிசாந்தினி-2ஏபி, எஸ்.அபிவர்னா- ஏ2பி, பி.பிரதீபா-3பி, பி.அபிவர்னா -3பி, எஸ்.கயானி-2பிசி, பி.கார்த்தீபன்-2பிசி, எஸ்.சஜீசன்-பி2சி, வி.சங்கீர்த்தனன்-பி2சி, எஸ்.வினோஜன்-பி2சி, பி.சதீஸ்கரன்- பி2சி.

### யா/ஞானாசாரியார் கல்லூரி

***கலைப்பரிவு***

தி.அனித்தா- 2ஏபி.

**வர்த்தகப்பிரிவு**

கு.சஞ்சிகா- ஏபிசி, வ.சிந்துயா- பி2சி.

### செங்குந்தா இந்து கல்லூரி

***கலைப்பிரிவு***

இ.தர்சிகா- ஏ2பி, தே.சுவேதா- ஏபிசி, சி.தாரகா- ஏபிசி, செ.சர்மினி- ஏ2சி, ச.ஜெலக்சி- ஏ2சி.

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

***கணிதப் பிரிவு***

எஸ்.கஜீவன்- 3பி, ஜி.ராகுலன்- 2பிசி, எஸ்.டிலுக்ஷன்- பி2சி, எஸ். அனோஜன்-பி2சி, எஸ்.கிருஷாந்தன்- 3எஸ், ஆர். யதுர்ஷன்- 3சி, டபிள்யூ- வினோஜா- ஏ2பி.

***விஞ்ஞானப் பிரிவு***

கே.தஜீவன்- 2ஏஸ்

***வர்த்தகப் பிரிவு***

கே.சிந்துஜன்- 3ஏ, பி.துஷாந்த்- 3ஏ, ஏ.தனுசன்- 2ஏபி, கே.சுதர்சன்- ஏபிசி, ஜே.அந்தோனி பிளின்ரன்- 3பி, எம்.பாலேந்திரா- 2பிசி, கே.மயூரன்- பி2சி, ஆர்.மதிரூபன்- பி2சி, எஸ்.கவிஷாந்தன்- ஏபிசி,

***கலைப்பிரிவு***

எஸ். பாபிலராஜ்- 2ஏபி, ஏ.டினோஸ்ரன்-2ஏசி, எஸ்.சஞ்சீவன்- ஏசிஎஸ், ஏ.சயந்தன்-2பிசி, பி.டார்வீன்- ஏபிசி, எம்.பாவில்-ஏ2எஸ், எஸ்.கோர்சென்- ஏசிஎஸ், ஆர்.நதீஸ்-2ஏசி, ரி.கொலின்ரென்- ஏபிஎஸ்.

### யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

***கணிதப்பிரிவு***

பா.ரூபிகன்யூசா- 3ஏ, வி.மதுலாஜினி-ஏ2பி, தி.சரூபி- 2பிசி, தி.ரஜித்தா- 2பிசி, க.கிருஷ்யாயினி- 3சி, நா.ரமியா- பி2சி, சு.சுகன்யா- 2பிசி, க.சிந்துஜா- 3சி, ப.ஜனனி- பி2சி, சு.ஜெயந்தினி- 3சி.

***விஞ்ஞானப்பிரிவு***

செ.தர்ஷிகா- ஏ2பி, அ.பிரியங்கா- ஏ2பி, உ.சங்கீதா- ஏபிசி, ஸ்ரீ.தர்ஷிகா- ஏ2சி.

***கலைப்பிரிவு***

க.கோபிகா- 2ஏபி, தெ.சுகிர்தா- 2ஏபி, த.தரண்யா- ஏ2பி, ப.மாதங்கி- ஏ2பி, த.தர்ஷனா- ஏபிசி, க.தர்ஷிகா- 3சி, ஜெ.நிரோஜனா- ஏ2பி, த.ஜெகரதீபா- ஏபிசி, கு.நிஷாந்தினி- ஏ2பி,க.சுஜெந்தினி- ஏபிஎஸ், நா.தானுஜாயினி- ஏபிசி, அ.ஜனனி-ஏபிசி, கி.பிரசாந்தினி- ஏபிசி, ப.ஜனனி-ஏபிசி.

***வர்த்தகப்பிரிவு***

த.அபிரா- 2ஏசி, பா.பானுப்பிரியா- ஏபிசி, ஸ்ரீ.சுஜீவா- ஏபிசி, மு.அர்ச்சனா- 2பிசி, தே.கிருஷ்ணமீரா- பி2சி.

### யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**

வி.சர்மிளி- ஏ2பி, ச.சயோரன்-2பிசி,

**கலைப்பிரிவு**

ட.சுகன்யா-2ஏசி, ஞா.பிசாந்தினி- ஏபிசி, ச.சுகன்யா-ஏ2சி, ந.தர்சிகா- ஏ2சி, ர.அஸ்வினி-3பி, ஜெ.ஜெயலதன்-2பிசி, அ.தினேஸ்குமார்-பி2சி, ர.திலக்ஸன்-பி2சி.

### யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

**விஞ்ஞானப்பிரிவு**

ப.வானதி-பி2சி, ஆ.டயாளினி-பி2எஸ், நி.கார்த்திகா- 3சி.

**வர்த்தகப்பிரிவு**

வே.வினுஷா-3பி
நா.பிறின்சிகா-2பிசி

**கலைப்பிரிவு**

ஆ.சசிற்றா-3ஏ, கு.கீர்த்திகா-2ஏபி, பா.பௌஜியா-2ஏபி, வ.கஸ்தூரி-2ஏபி, சி.சிவானுயா-2ஏபி, வி.தாரணி-2ஏபி, பி.நிஜானா-ஏ2பி, கோ.சுதாந்தினி-3பி, நா.கம்சிகா-3பி, ஆ.ரம்சியா-3பி, பா.ஸ்ரெலா-ஏபிசி, ப.மியூட்றிஸ்-ஏபிசி, ர.மிருஷாணி-ஏபிசி, கு.துர்க்கா-ஏபிசி, த.விதுர்ஷா-ஏபிசி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்.
- நானோபஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பஞ்சாங்கத்தில் மாரி பொழியுது இங்கோ புழுதி பறக்குது

இயற்கை எங்களுடன் பகைத்துவிட்டது. மாரி பொழிய வேண்டிய நேரத்தில் வெயிலும் பனியும்.

நெல் பிரசவத்திற்காக குடலைப் பருவத்தில் காட்சி தர வேண்டிய நெற் பயிர்கள் நீரின்றி தறுக்கணித்து முள்ளிவாய்க்காலில் நடந்த கொடூரம் போல புற்களின் ஆக்கிரமிப்பில் சுருண்டு போன சோகக் கதை.

மாரி மழை இம்முறை அதிகம் என்ற பஞ்சாங்கத்தின் எதிர்வு கூறலுக்குள், இப்படியொரு இயற்கை எதற்கானது என்று ஒருகணம் விசாரித்தால்,

குடமுழுக்கு நடந்த தெய்வ விக்கிரகங்களை புரட்டி எடுத்த பாவவினையும் இந்து ஆலயங்களின் பெறுமதி மிக்க கலைத்துவங்களை அழித்த நாசமும் சேர்ந்து மழையின்றி, அதனால் நவதானிய விளைச்சலின்றி பஞ்சத்தில் எங்களை உழலும் வகையில் இயற்கை வஞ்சித்துள்ளது என்பதே உண்மை என்று உணர வேண்டும்.

எங்கள் பூமியில் பாவங்கள் மலிந்து விட்டன. ஆட்சி-அரசியல் முதல் ஆன்மீகம் போதிக்கும் மதத்தலைமைகள் வரை எங்குமே பொய்யும், புரட்டும்.

ஆன்மீகத்தைப் போதிக்க வேண்டிய துறவிகள் அரசியல் பேசினால்-அராஜகம் நடக்க ஆலோசனை வழங்கினால் ஆபத்து இப்படியாகத்தான் இருக்கும் என்பதை இயற்கை இந்த நாட்டிற்குப் போதித்துள்ளது.

இந்து சமயத்தில் ஒரு நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கை கோயில்களுக்கு மகா குடமுழுக்கு நடத்தினால் மழைவரும் என்பதாகும்.

அந்த நம்பிக்கைக்கு யாரும் விஞ்ஞான விளக்கம் கேட்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

உலக வாழ்க்கை என்பதன் அடித்தளம் விஞ்ஞானத்தினாலானது அல்ல. அது நம்பிக்கையிலானது.எனவே இறை நம்பிக்கை என்பது அவசியம்.

ஆக, மழையின் பொருட்டும்; மகா கும்பாபிஷேகம் செய்து வைக்க, மறுநாளே கோயில் உடைக்கும் கும்பல் இருக்கும் போது, இறைவன் எங்ஙனம் எங்கள் மீது அன்பு செலுத்துவான்.

சூரியப் பொங்கல் செய்து நன்றி பாராட்டும் நாங்கள்; கத்தரிக்கும், புடோலுக்கும், கீரைக்கும் கிருமிநாசினி தெளித்த மறுநாளே அவற்றைச் சந்தைப்படுத்துகின்றோமெனில் மாரி பொழிவது எங்ஙனம் நியாயமாகும் என வருணன் தன்னைத் தானே கேட்டுக் கொள்வான் அல்லவா?

யாழ்.மாவட்டம் புற்றுநோய்த்தாக்கத்தில் முதலிடம் என்ற சோகமான செய்தியைக் கேட்டும் நாம் இரக்கம் கொள்ளவில்லை எனில் இயற்கை எங்களோடு நிச்சயம் கோபம் கொள்ளும் என்பதை உணர்ந்தாக வேண்டும்.

உண்மைகளை உணராதவரையில் எங்கள் வாழ்வில் இருளின் ஆக்கிரமிப்பே அதிகமாக இருக்கும். எனவே உண்மைகளை உணர்ந்து எங்களை நாங்களே கட்டுப்படுத்தி அறம் காக்க வேண்டும். அப்போதுதான் இயற்கையும் நம்மீது இரக்கம் கொள்ளும்.

## வலி.கிழக்கு பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின்2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என சபையின் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

சபையின் தவிசாளர் தலைமையில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கான விசேட சபை அமர்வில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2014 ஆம்ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை எதுவித தடையுமின்றி நிறைவேற்ற வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடம் வலியுறுத்திக் கூறியிருந்தது.

இந்நிலையில் 21 அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் 16 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஐவர் ஈ.பி.டி.பியையும் சேர்ந்தவர்கள்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிலர் ஈ.பி.டி.பியினருடன் இணைந்து வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிக்க முயற்சித்தனர்.

ஆனால் நேற்று நடைபெற்ற விசேட சபை அமர்விற்கு கட்சியின் தலைமைப் பீடத்தின் அறிவுறுத்தல்களையடுத்து அதிருப்தியாளர்கள் வருகைதராமல் ஒதுங்கிக்கொண்டனர்.

மேலும் சபை அமர்வில் ஏற்கெனவே ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு 03 மாதங்கள் சபையால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த உறுப்பினர் ஒருவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்தின் ஆலோசனைக்கமைய அவரது இடைநிறுத்திவைக்கப்பட்ட காலத்தினை ஒரு மாத காலமாகக் குறைப்பதென தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் இன்று முதல ஒரு வார காலப்பகுதிக்கு பொதுமக்களின் பார்வைக்காக ஒவ்வொரு உப அலுவலகங்களிலும்தலைமை அலுவலகத்திலும் வைக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-6)

## செய்தியாளர் தமிழ் பிரபாகரனை விடுதலை செய்ய உதவுங்கள்!

### மன்மோகனுக்கு வைகோ கடிதம்

இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள தமிழகச் செய்தியாளர் மகா தமிழ் பிரபாகரனை விடுதலை செய்ய உதவிட வேண்டும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தொலைநகலில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அக் கடிதத்தில் வைகோ எழுதியுள்ளதாவது,

மன்மோகன் சிங் அவர்களுக்கு வணக்கம், சுற்றுலா நுழைவு உரிமை பெற்று இலங்கைக்குச் சென்ற, தமிழகச் செய்தியாளர் மகா தமிழ் பிரபாகரன், இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு உள்ள செய்தியை உடனடியாகத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர பசுபதிபிள்ளை ஆகியோருடன், மகா தமிழ் பிரபாகரன் பொன்னாவிழி என்ற கிராமத்துக்குச் சென்றார். அங்கிருந்து வலைப்பாடு கிராமத்துக்குச் சென்று, புனித அந்தோனியார் தேவாலயத்தின் பங்குத் தந்தையோடு உரையாடிக் கொண்டு இருந்தபோது, 25-ம் திகதி புதன்கிழமை பகல் 1.30 மணி அளவில், இலங்கை இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டனர்.

மூவரையும் கைது செய்த இராணுவத்தினர், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனையும், பசுபதிபிள்ளையையும் மாலையில் விடுவித்தனர். மகா தமிழ் பிரபாகரனை மட்டும் தொடர்ந்து சிறை வைத்து உள்ளனர்.

செய்தியாளர்கள், உலகம் முழுமையும் பயணிப்பதற்கும், மக்களோடு கலந்து உரையாடுவதற்கும் உரிமை பெற்றவர்கள். ஆனால், இலங்கையில் மனித உரிமைகள் நசுக்கப்பட்டு வருவதையும், செய்தியாளர்களுக்கு எவ்வித சுதந்திரமும் இல்லை- உயிர் ஆபத்தை எதிர்கொண்டு இருக்கின்றார்கள் என்பதையும் உலகம் அறியும். சண்டே லீடர் ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க, அரசுப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் பல செய்தியாளர்களும் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

அண்மையில் இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் இக்கூற்றை உறுதிப்படுத்தி உள்ளார். எனவே, மகா தமிழ் பிரபாகரனின் உயிருக்கு இலங்கை இராணுவம் மற்றும் காவல்துறையால் ஊறு நேரக் கூடும் என அஞ்சுகிறேன்.

தாங்கள் உடனடியாக நமது வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் வழியாக நடவடிக்கை மேற்கொண்டு, செய்தியாளர் மகா தமிழ் பிரபாகரனை விடுவித்திட ஆவன செய்திடுமாறு அன்புடன் வேண்டுகிறேன் என வைகோ தனது கடிதத்தில் கோரியுள்ளார். (செ-11)

## பெரும் அமளி துமளிக்கு மத்தியில் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றம்

(கரவெட்டி)


வல்வெட்டித்துறை நகர சபையின் வரவு செலவுத் திட்டம் நேற்றுக் காலை பெரும் அமளிதுமளி மத்தியில் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி நகர சபையின் வரவு செலவுத் திட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு சபை மண்டபத்தில் தவிசாளர் ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது ஒரு பகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 உறுப்பினர்களை கூட்டத்தில் பங்கு கொள்ளாதவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு உறுப்பினர்களை நகர சபையின் வரவு செலவுத் திட்டத்தில் கலந்து கொள்ளாதவாறு எதிர்ப்பை வெளியிட்டு தடுத்தனர் . இதில் பதவிச் சண்டைக்காகவா தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தோம்? பதவி மோகத்தால் நல்லவர்களை பழி வாங்காதே! தமிழரசுக் கட்சியே பதவி வெறியாளர்களை பதவியிலிருந்து நீக்கு! உறுப்பினர்களே நகர சபையின் வளர்ச்சியில் ஒத்துப் போங்கள் அல்லது வெளியேறுங்கள் போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்கும் வந்த வல்வெட்டித்துறை பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் சுமுகமாக பேசி 5 உறுப்பினர்களையும் உட்செல்ல அனுமதி கோரிய போதும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனுமதிக்கவில்லை. தொடர்ந்து எதிர்ப்புக் கோசங்களை வெளியிட்டனர். இதனால் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்குமிடையே கடும் வாக்கு வாதம் இடம்பெற்றது. இறுதி வரை உறுப்பினர்கள் உட்செல்லாதவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையால் சபையின் வரவு செலவுத் திட்டம் 4 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் 2 உறுப்பினர்களும் ஈ.பி.டி.பியின் இரு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தமையால் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (அ-9-24)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



சரணாகதி என்பதை ஓர் அடிமைத்தனமான அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் ஓர் அடிமையைப்போல் சரணடைவதை கடவுள் ஒருபோதும் விரும்பமாட்டார். அவர் உங்கள் நண்பர். ஆகவே சரணாகதி என்றால் அதன் பொருள் மனதினால் முடிந்தது எதுவுமே இல்லை. ஆனால் இந்த மனதின் ஓட்டத்தை நிறுத்தவும் முடியாது என்று உணர்ந்து அதை ஒதுக்கி வைப்பதே சரணாகதி.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### சாதிப்பதற்கு என்ன வழி?



❖ நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே, உண்மையான வாழ்க்கையை அனுபவிக்கிறோம்.

❖ துன்பப்புள்ளியாக தோன்றும் இந்த மனிதப் பிறவியே, மகான்களைப் பொறுத்தமட்டில் பயிற்சிப் பள்ளியாக அமைந்து நெறிப்படுத்துகிறது.

❖ தியாகம் செய்யுங்கள். பிறரின் உள்ளத்தை வெல்லும் சக்தி தியாகத்திற்கு மட்டுமே உண்டு.

❖ கோழையும், முட்டாளும் விதி என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால், ஆற்றல் மிக்கவனோ விதியை நானே வகுப்பேன் என்று சபதம் செய்வான்.

❖ முதலில் உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். பின்பு கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். இதன் மூலம் எதையும் சாதிக்கும் வல்லமை பெறுவீர்கள்.


❖ அன்பின் மூலமாகவே கடமை இனிதாக முடியும். சுதந்திரமான நிலையில் மட்டுமே அன்பு தன் பூரணத்தன்மையுடன் பிரகாசிக்கும்.

❖ உங்களின் பலவீனத்தை எண்ணுவதால் பலன் சிறிதும் விளையாது. பலவீனத்திற்குப் பரிகாரம் பலத்தை நினைப்பது மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷஸ் டெஸ்ட்

# அவுஸ்திரேலியாவுக்கெதிராக இங்கிலாந்து முன்னிலை



அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு

5 போட்டிகள் கொண்ட அஷஸ் தொடரில் பங்குபற்றிவரும் இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான தொடரின் 4ஆவது போட்டியில் இரண்டாம் நாள் முடிவில் இங்கிலாந்து அணி முன்னிலையைப் பெற்றுள்ளது.

6 விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக கெவின் பீற்றர்சன் 71 ஓட்டங்களையும், மைக்கல் காபெரி 38 ஓட்டங்களையும், இயன் பெல், அலஸ்ரெயர் குக் இருவரும் தலா 27 ஓட்டங்களையும், ஜோ றூட் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன் 5 விக்கெட்டுக்களையும், றயன் ஹரிஸ் 2 விக்கெட்டுக்களையும், பீற்றர் சிடில், நேதன் லையன், ஷேன் வொற்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி நேற்றைய நாள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று தடுமாறி வருகிறது.

முதலாவது விக்கெட்டை 19 ஓட்டங்களுக்கு இழந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை



இழந்து 110 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக கிறிஸ் றொஜர்ஸ் 61 ஓட்டங்களையும், பிரட் ஹடின் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்ருவேர்ட் ப்ரோட் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், ரிம் பிரெஸ்னன் 2 விக்கெட்டுக்களையும், பென் ஸ்ரோக்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்படி, ஒரு விக்கெட் கைவசமுள்ள நிலையில் அவுஸ்திரேலிய அணி 91 ஓட்டங்களால் பின்னிலையில் காணப்படுகிறது. (க)

# வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

வலி.மேற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி வார இறுதிப் பெருவிழா எதிர்வரும்30ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வையொட்டி வலி.மேற்கு பிரதேச மட்டத்தில் மாபெரும் போட்டிகள் இடம்பெற தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

**சைக்கிள்- மரதன் இறுதிப்போட்டிகள்**

வலி.மேற்கு பிரதேச மட்டத்தில் ஆண்களுக்கான 20 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டியும் 7 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டியும் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் ஏற்கனவே பதிவு செய்தவர்களும் போட்டியில் புதிதாக பங்குபெற விரும்புபவர்களும் உடன் வலி.மேற்கு பிரதேசசபைக்கு அன்றையதினம் காலை 6 மணிக்கு வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

**வலைப்பந்து போட்டி (பெண்கள்)**

வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் இடம்பெறும்.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் இன்று சபையில் விபரங்களை வழங்கி உதவவும்.

**துடுப்பாட்டம் மற்றும் உதைபந்து இறுதிப்போட்டிகள்**

வலி.மேற்கு பிரதேசசபைக்குட்பட்டவகையில் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டம் மற்றும் உதைபந்து போட்டிகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன.

இதில் ஆண்களுக்கிடையிலான துடுப்பாட்டம் மற்றும் உதைபந்தாட்டப்போட்டிகள் யாவும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் வட்டு.மத்திய கல்லூரியிலும் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

எனவே இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறு தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் கேட்டுள்ளார்.

போட்டி ஒழுங்குகள் சிறிய நேர இடைவெளிகளில் இடம்பெறும்.

வலி.மேற்கு உப அலுவலகங்களுக்குட்பட்ட பொறுப்பதிகாரிகள் விளையாட்டுநிகழ்வுகளில் பங்குபற்றுவதனை கூடிய முக்கியத்துவம் கொடுத்து உறுதிப்படுத்துமாறும் தவிசாளர் கேட்டுள்ளார்.(த)



உரும்பிராய் புனித மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற உடுவில் கிங் ஸ்ரார் அணியினரை படத்தில் காணலாம்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி; தாவடி காளியம்பாள் வெற்றி

வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சி சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் உடுவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியும் மோதின.



ஆரம்பம் முதலே போட்டியை இரு அணிகளும் தத்தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தன.

இதன்படி மிக விறுவிறுப்பாக இடம்பெற்ற முதல் அரைப்பாதியின் போது 3:3 என்னும் புள்ளிகள் அடிப்படையில் இரு அணிகளும் சமநிலையிலிருந்தன.

இரண்டாவது அரைப்பகுதியே வெற்றியைத் தீர்மானிக்கும் என்பதால் இரு அணிகளும் சளைக்காமல் போராடின.

இரண்டாவது அரைப்பாதியின் போது சுவாரஸ்யங்களுக்கும் வாய்த்தர்க்கங்களுக்கும் குறைவில்லாது இருந்தது.

இரண்டாவது பாதியின் போது தாவடி காளியம்பாள் 3 பழங்களைப் பெற்ற போதும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியால் புள்ளிகள் எதனையும் பெற முடியாது போனது.

போட்டி நிறைவடைவதற்கு சிறிது நேரம் இருக்கையில் சிறு குழப்பம் காரணமாக தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்க முடியாது என மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி தெரிவித்ததை தொடர்ந்து தாவடி காளியம்பாள் வெற்றி பெற்றதாக நடுவர்கள் அறிவித்தனர்.

எனினும் போட்டி நிறைவின் போது தாவடி காளியம்பாள் 6:3 என்னும் புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது.

இறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன. (க-23)

# நியூசிலாந்தை வீழ்த்தி கரீபியன் திரில் வெற்றி

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 2 விக்கெட்டுகள வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து- மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் ஆக்லாந்தில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி, மேற்கிந்திய தீவுகளின் அபார பந்து வீச்சால் திணறியது.

முடிவில் 42.1 ஓவரில் 156 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

அதிகபட்சமாக பிரண்டன் மெக்கலம் 51 ஓட்டங்களும், நாதன் மெக்கலம் 47 ஓட்டங்களும் எடுத்தனர்.

மேற்கிந்திய தீவுகளின் அணி சார்பில், வெய்ன் பிராவோ 4 விக்கெட்டுகளும், ராம்பால், ஹோல்டர் தலா 2 விக்கெட்டுகளும் எடுத்தனர்.

பின்னர் 157 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்து பரிதவித்தது.




ஒரு கட்டத்தில் 121 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்டுகளை இழந்தது.

ஆனால் டேரன் சமியின் நேர்த்தியான ஆட்டத்தால் மேற்கிந்திய தீவுகள் அணி 27.3 ஓவரிலேயே 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 157 ஓட்டங்கள் எடுத்து 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டேரன் சமி 27 பந்தில், 5 பவுண்டரி, 3 சிக்சருடன் 43 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு வித்திட்டார்.

நியூசிலாந்து தரப்பில் மெக்கிளேநாகன் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார், ஆட்டநாயகன் விருதை டேரன் சமி தட்டிச் சென்றார்.

இந்த வெற்றி மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில், மேற்கிந்திய தீவுகள் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா தீர்மானம்...

இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக குழுவில் இலங்கை மீது இரண்டு தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அத்துடன், ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இவ்விவகாரங்கள் தொடர்பில் இலங்கை மீது மேலுமொரு தீர்மானம் கொண்டு வரப்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது (செ-11)

# ரணில்...


ரணிலுக்கும் இடையிலான சந்திப்பில் திஸ்ஸ அத்தநாயக்க, விஜேதாச ராஜபக்ஷ மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.

மேல் மாகாண சபைத் தேர்தல், அடுத்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து இதன்போது பேசப்பட்டுள்ளது.

எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகளை இணைத்து கூட்டணி ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த சந்திப்பு தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் ஊடகங்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை. (செ-11)

# ஸ்ரெய்ன் அபாரம்; இந்தியா தடுமாற்றம்



டர்பனில் நடக்கும் இரண்டாவது டெஸ்டில் வேகத்தில் மிரட்டிய தென் ஆபிரிக்காவின் ஸ்ரெய்ன் 6 விக்கெட் கைப்பற்ற முதல் இன்னிங்சில் இந்திய அணி 334 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இளம் வீரர் அஜின்கியா ரகானே அரைச்சதம் அடித்து ஆறுதல் அளித்தார்.

பின் முதல் இன்னிங்சை துவக்கிய தென் ஆபிரிக்கா அணிக்கு கப்டன் ஸ்மித் அல்விரோ பீட்டர்சன் ஜோடி நல்ல துவக்கம் கொடுத்து இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்சில் தென் ஆபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்கள் எடுத்திருந்தது: ஸ்மித் 35 ,பீட்டர்சன் 46 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர்

# மனித உரிமைகள்...

யுள்ள அரசாங்கம் என்ற வகையில் எம்மிடையே எழுப்பக்கூடிய வினாக்களை அவற்றுக்கான விடைகளை தயார்படுத்தி வருகின்றோம்.

மோதல்களுக்குப் பின்னர் மிக குறுகிய காலத்திற்குள்ளாகவே அபிவிருத்தி மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கச் செயற்பாடுகள் கட்டியெழுப்பப்படுகின்றன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகள் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பான முன்னேற்றச் செயற்பாடுகளை விளக்கமளிப்பது குறித்து நாம் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளோமெனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் எந்தவொரு நாட்டிடமிருந்தோ எமக்கு அழுத்தமோ அச்சுறுத்தலோ ஏற்படுத்தப்படவில்லை.

ஜெனீவா கூட்டத் தொடரிற்கு சமுகமளிப்பதற்கு முன்னதாக அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் கொழும்பிலும் ஜெனீவாவிலுமுள்ள அனைத்து வெளிநாட்டு தூதுவர்களையும் நேரில் சந்தித்து இலங்கை அரசாங்கத்தின் அரசியல் மற்றும் அபிவிருத்தி நிலைமை தொடர பில் விளக்கமளிப்பார்.

அத்துடன் எமது முன்னேற்றச் செயற்பாடுகள் தொடர்பிலான அறிக்கையினை எமது தூதரகம் மற்றும் உயர்ஸ்தானிகராலயமூடாக அனைத்து நாடுகளுக்கும் கிடைக்கச் செய்வோம்.

இதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமைகள் தொடர்பிலான முன்னேற்றச் செயற்பாடுகள் குறித்து உலக நாடுகள் தெளிவான விளக்கத்தினை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருக்குமெனவும் அவர் கூறினார். (செ-11)




# சர்வதேச அரசியல்...

தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரசியலமைப்பின் 13-ம் திருத்தத்தைப் பற்றி மட்டுமே ஆராயும் நோக்கம் கொண்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கருதுவது சிறுபிள்ளைத் தனமானது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருந்த சந்தர்ப்பத்தில், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவந்ததையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆனால் ஜனாதிபதி வடக்கு மாகாண சபையின் தேர்தலை நடத்தி தனது அரசாங்கத்துக்கே சாதகமற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்வார் என்று அவர்கள் நம்பியிருக்கவில்லை. ஆனால் தேர்தல் நடந்து, இன்று த.தே.கூட்டமைப்புக்கே மாகாண சபை யின் ஆட்சியதிகாரம் கிடைத்துள்ளது என்றார்.

ஆனால், கடந்த காலங்களில் அமைந்த இவ்வாறான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்களும் ஆணைக்குழுக்களும் முன்வைத்த பரிந்துரைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகிறதே என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பியபோது,

1947-இல் நிலைமை இப்படித்தான், 52-இல் இப்படித்தான் என்று வரலாற்றை முழுவதுமாக புரட்டி புரட்டி பேசமுடியும். ஆனால் ஜனாதிபதி நாட்டிலுள்ள எல்லா தரப்பினரையும் இணைந்து பணியாற்றுவதற்காக வருமாறு திறந்த அழைப்பை விடுத்திருக்கிறார். அன்று விடுதலைப்புலிகளின் கொடூரங்களுக்கு மத்தியில் அமைதியாக இருந்த த.தே.கூட்டமைப்பினர், இன்று பல்வேறு சமூக, பொருளாதார அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் மௌனம் காக்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச ரீதியிலான அழுத்தத்தங்களை சுமத்த இதனை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தியே, "சர்வதேச ஒக்ஷிசனில் உயிர்வாழ்கின்ற தரப்பினர்" இந்த தெரிவுக்குழுவை எதிர்க்கின்றனர் என்றும் என அமைச்சர் தினேஸ் குணவர்த்தன குற்றஞ்சாட்டினார்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு 13-ம் திருத்தத்துக்கும் அப்பால்சென்று தீர்வுத்திட்டம பற்றி ஆராயுமானால் அதில் கலந்து கொள்வதுபற்றி ஆராயமுடியும் என்று த.தே.கூட்டமைப்பு கூறுகிறது. 13-ம் திருத்தம்பற்றி மட்டும் பேசும் இப்படியான தெரிவுக்குழுவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் நியாயம் இருக்கிறது தானே என்று அமைச்சரிடம் வினவியபோது,

"இந்தத் தெரிவுக்குழு 13-ம்திருத்தம் பற்றி மட்டும் பேசுகிறது என்று த.தே.கூட்டமைப்பு சொன்னால் அது சிறுபிள்ளைத்தனமானது. அரசியலமைப்பின் ஏதாவது பிரிவுபற்றி மட்டும் பேசுவதற்காக இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவில்லை" என நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறுகின்ற முக்கிய அமைச்சரான, அரசாங்கக் கட்சியின் முக்கிய அமைச்சரான தினேஷ் குணவர்தன தெரிவித்தார். (செ-11)

# தனியார் பேருந்து...

ருந்தனர்.

இந் நிலையில் இப் பகிஷ்கரிப்பு தொடர்பில் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ். ரி.கே.இராஜேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மெனிக்பாம் முகாமில் இருந்து மீள்குடியேற்றப்பட்டபோது அப் பகுதி மக்களின் நலன்கருதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் அப்போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோரின் வேண்டுகோளின் போரில் 8 தனியார் பஸ் உரிமையாளர்கள் தம்மிடம் இருந்த தூர இடத்திற்கான வழித்தட அனுமதிகளை மாற்றி மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளுக்கு தமது சேவையை வழங்க முன்வந்திருந்தனர். தற்போதும் அவர்கள் அந்தந்த வழித்தடங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கமானது அந்த வழி த்தட அனுமதி முறைக்கோடாது என குற்றம் சாட்டுவதுடன் அதனை நிறுத்துமாறும் கோருகின்றனர். ஆனால் வழித்தடங்களுக்கான அனுமதியை வழங்குவதும் அதனை நிறுத்துவதும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு மற்றும் அரசாங்க அதிபர்களுக்கு உரியதே தவிர அதனை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள் நிறுத்தமுடியாது.

இவ்விடயம் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினருக்கு தெரிந்திருந்தும் கூட தவறான பிரசாரங்களை மேற்கொண்டு உரிமையாளர்களை பிழையான முறையில் வழிநடத்தி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள போதிலும், நாம் மக்களுக்கான சேவையை வழங்குவது என முடிவெடுத்து காலையிலிருந்து சேவையைத்தொடர்ந்துள்ளோம்.

எனினும் தமக்கு பகிஷ்கரிப்பில் ஈடுபடும் பஸ் உரிமையாளர்களால் சிக்கல்கள் ஏற்படும் என்பதனால் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருடாக வட மாகாணத்தில் உள்ள அனைத்து இராணுவ நிலையங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு கடிதம் மூலம் கோரியுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இப் பகிஷ்கரிப்பினையடுத்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஈழுமக்கள் ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வட இலங்கை தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத் தலைவர் பொ.கெங்காதரன், யாழ்.மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர்கள் போன்றோர் வவுனியா மாவட்ட அரச அதிபர் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையையடுத்து பகிஸ்கரிப்பு நேற்றைய தினம் முற்பகல் 11.30 அளவில் கைவிடப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனியார் பேருந்து சங்கங்களுடன் கலந்துரையாடியுள்ளார். (செ-9.15.250.266)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CBF, DBF AAT, CAB - I

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில்
**புதிய பிரிவு, மீட்டல் பயிற்சி வகுப்புக்கள்**
100% சித்திக்கு உத்தரவாதம்
எமது தலைசிறந்த CIMA Qualified Lecturers
ஆரம்பம் 04-01-2014 மாலை 2மணி

**Mind vision**
Technology CAMPUS
மணிக்கூட்டு ஒழுங்கை யாழ்ப்பாணம் | உப தபாலகம் அருகில் கோண்டாவில்
077 933 93 53
(C-5925)


## இந்திய-இலங்கை...

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை நேற்று சந்தித்து, இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அப்போது அவர்களிடம் பேசிய சல்மான் குர்ஷித், இந்திய-இலங்கை மீனவ பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தை ஜனவரி மாதம் நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்கவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என உறுதி அளித்தார். (செ-11)

## தென்னாபிரிக்க...

பாணம் கோட்டைக்கும் அவர் சென்று புனரமைப்பு பணிகளைப் பார்வையிட்டார். அத்தோடு வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கும் தூதுவர் சென்றிருந்தார்.

இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த தென்னாபிரிக்க தூதுவர், இன்று பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (செ-6)


**DCM** யாழ் நகர் A/L 2016 கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்
05.01.2014 ஞாயிறு 9.00A.M
வழமையான ஆசிரியர் குழாமுடன்
(C-5945)

# STUDY IN LONDON

CITY & GUILDS APPROVED CENTRE

கடந்த 8 மாதங்களில் 50 மாணவர்களிற்குமேல் City&Guilds(UK) English Diploma (A1,B1) பரீட்சையில் சிறந்த, அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுசென்றுள்ளனர்
City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
பரீட்சையின் பின்னர் லண்டன் நாட்டின் Diploma சான்றிதழை பெற்று, லண்டன் கல்லூரிகளில் உயர் கல்வியை தொடரமுடியும்.
ஏன் நீங்கள் City&Guilds English இனை தெரிவுசெய்யவேண்டும்???
தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், வங்கிகள், அரசாங்க உத்தியோகத்தில பணிபுரிபவர்கள் City&Guilds ஆங்கிலத்தினை படிப்பதனூடாக உலகம் முழுவதிலும் அங்கீகாரத்தை பெற்ற DIPLOMA(UK) சான்றிதழை பெற்றுக்கொள்ளமுடியும்.
எமது நிறுவனம் LONDON நாட்டின் அங்கீகாரத்தினைப்பெற்று தென்மராட்சி மண்ணில் இயங்கிவரும் தனித்துவமான கல்லூரியாகும்.



WORLD EDUCATION CONSULTANCY
No:377,Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447,021 7200 989
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகமையில்....
Gov.Reg No; TN/DS/UC/0324

# N.C.A. கல்வி நிறுவனம்

1-ம் கட்டை பருத்தித்துறை
**A/L 2016**
✦ கலை, வர்த்தகம்
✦ TECHNOLOGY
ஆகிய பிரிவுகள் ஆரம்பம்
04-01-2014 காலை 9 மணி

**A/L DAY CLASS -2014**
LOGIC ஆரம்பம் - 30-12-2013 Mon 8.00 AM
By: P. கமல்
வாரத்தில் 6 மணித்தியால வகுப்பு
NEC - யாழ்நகர்

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

**DCM** யாழ் நகர் DAY CLASS கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்
30.12.2013 திங்கள் 9.00A.M
Note வெளி மாவட்ட மாணவர்களுக்கு விசேட வகுப்புகள் நடாத்தப்படும்
(C-5945)

# NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடங்களில் | மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.

**A/L DAY CLASS**

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்.நகர் |
|---|---|---|
| கணக்கீடு | பாலகஜன் | பாலகஜன் |
| பொருளியல் | சுஜீதரன் | சுஜீதரன் |
| வணிகக்கல்வி | யசோ | பாலசபேஷ் |
| தமிழ் | கீர்த்திராஜன் | தங்கரூபன் |
| இந்துநாகரிகம் | ஸ்ரீஸ் | சுரேஸ் |
| அளவையியல் | கமல் | கமல் |
| புவியியல் | பாலா | சங்கர் |
| நாடகம் | சுகந்தன் | சுகந்தன் |
| வரலாறு | தாஸ் | தாஸ் |
| English Lit. | Subramaniyam | Subramaniyam |

ஆரம்பம் 30.12.2013 திங்கள் 8 மணி
(C-5926)

**A/L பெறுபேற்றின் பின்னர்**
★ பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதே என்ற கவலையா?
★ கிடைத்தாலும், உள்நாட்டில் பட்டக்கல்வியை நிறைவுசெய்ய நீண்டகாலம் பிடிக்குமே என்ற கவலையா?
★ வெளிநாட்டில் கற்பதானால் அதிக பணம் செலவாகுமே என்று அஞ்சுகிறீர்களா?
கவலையை விடுங்கள்
**50% புலமைப்பரிசில்**
& வங்கிக் கடன் வசதிகளுடன்
UK, Australia, New Zealand, Switzerland, Canada, America, Malaysia & Thailand
★ விரும்பிய நாட்டில் விரைவாக பட்டக்கல்வி
★ 50,000 ரூபா வருமானத்துடனான தொழில்பயிற்சியை நிறைவு செய்து
வேலைவாய்ப்புக்கள் பெறும் வரையில் வழிகாட்டுகிறது
**சிகரம் கல்வி-தொழில் வழிகாட்டி**
Medicine - Engineering – Business Studies – Hotel Management – LAW and Many More Courses
Call/SMS Name & Address to: 077 36 16 798
மேலதிக விபரங்களுக்கு
**www.sikaram.lk**
கல்விக்கும் தொழிலுக்கும் என்றே ஒரு இணையம்
இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(C-5942)

பல்கலைக்கழக அனுமதி & தொழில் உத்தரவாதமான
**தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**
க.பொ.த. (உ/த) 2014 & 15
க.பொ.த. (சா/த) 2014 & 15
பதிவுகளுக்கு:
077 36 16 798
**சிகரம் ஊடக இல்லம்**
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
Tel: 077 3616 798, 021 222 0011
(C-5943)

**ஆசிரியர் தேவை**
வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு விஞ்ஞானம், புவியியல், வரலாறு, சுகாதாரம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை.
தொடர்புகளுக்கு :
021 791 7791
(5157)

**G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!**
**விசேட கட்டணக் கழிவுகள்**
பல்கலைக்கழக கல்வி,
வேலைவாய்ப்பு,
வெளிநாட்டில் உயர்கல்வி,
ஏனைய கற்கை நெறிகளை
மேற்கொள்ள காத்திருக்கிறீர்களா?



ஆங்கில அறிவு இல்லாமல் இவை தெவுமே சாத்தியப்படாது.
சர்வதேச தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் உங்களுக்காக எமது நிறுவனம் வழங்கும்
(C-5932)

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick Learning Course) (1½ Months)
**DIPLOMA IN ENGLISH** (2 Months)
✱ இப்பாடநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் City & Guilds இன் English examக்கு தோற்ற முடியும்.
✱ Birtish Council இனால் நடாத்தப்படும் Cambridge ESOL பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.
✱ Excellent Teachers' Panel & Individual attention
✱ எமது நிறுவனம் City & Guilds, British Council அங்கீகாரம் பெற்ற முகவர்கள்
Batch1: 06-01-2014
Batch2: 11-01-2014
Batch3: 15-01-2014
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மை தொடர்பு கொள்ளவும்.
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15, Sirambiyady.Lane, (Off Stanley Road), Jaffna.
No.3, 6th Lane, Vairavar Kovil Rd, Vairavapuliyankulam,Vavuniya.
Tel: 021-2224550 HotLines:0777222422, 0714299935, 0777730074 Tel 024-2245267

# விடுதலைப் பெருவிழா

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28)

கவலையா, கண்ணீரா,
தீராத வியாதியா,
பிசாசின் பிடியா,
கடன் தொல்லைகளா,
பில்லி - சூனியக்கட்டுக்களா,
பாவங்களா,
பரம்பரை சாபங்களா,
அடிமைத்தனங்களா
ஆகியவற்றிலிருந்து...

இயேசு விடுதலை கொடுக்கிறார்...
பிரவேசம் இலவசம்

காலம் : 27, 28, 29 மார்கழி 2013
நேரம் : தினமும் மாலை 4.00 மணிக்கு
இடம் : சங்கிலியன் பூங்கா, முத்திரைச் சந்தி, நல்லூர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(C-5929)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை
673, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
குறிப்பு :
வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறைக்கான பஸ் தரித்து நின்று செல்லும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org